# ஒலிபெருக்கி நிறுத்தப்பட்டது!

தமிழ் நாட்டு திமுக அரசு கலைக்கப்பட்டதற்குக் கண்டனம் தெரிவிக்குமுகமாக பம்பலப்பிட்டி சரசுவதி மண்டபத்தில் கடந்த ஞாயிறன்று நடைபெற்ற கூட்டமொன்றில் இடை நடுவில் 'புதந்த சி. ஐ. டி. பொலிசார் ஒலிபெருக்கியை பாவிக்கக் கூடாது என்று தடுத்து நிறுத்தியதாகத் தெரியவருகிறது.

சுதந்திரன்
SUTANTIRAN

விலை: சதம் 60, தொலைபேசி: 23411 நிறுவியது 1947

வள்ளுவர் ஆண்டு 2007 பங்குனி 1. ற அவ்வல் 12 (14-3-76) ஞாயிறு புத்தகம் 29, இதழ் 42

# சர்வதேசப் பிரச்சினையாக ஈழப் பிரச்சினை உருவெடுக்கும்!

### ஐ. நா. சபைக்கு எடுத்துச்செல்ல இலண்டனில் முயற்சி!

இலங்கைத்தமிழர் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் சபைக்கு எடுத்துச்செல்லும் முயற்சிகள் இப்போது தீவிரமாக நடைபெற்று வருகிறது. இந்த முயற்சியில் இலண்டனிலுள்ள சிறுபான்மை உரிமைக் குழுவினர் அக்கறையெடுத்து நடவடிக்கைகளிலீடுபட்டு வருகின்றனர். மிக விரைவில் உலக நாடுகள் மன்றத்திலும் ஈழத்தமிழர் உரிமைக் குரல் எழுப்பப்படுவதற்கான சாத்தியங்கள் இப்போது தென்படுகின்றன. இதன் மூலம் ஈழத்தமிழர் பிரச்சினை ஓர் சர்வதேசப் பிரச்சினையாக உருவெடுக்கும் என்று அரசியல் நோக்கர்கள் எதிர்பார்க்கின்றனர்.


இலண்டனில் இயங்கும் அனைத்துலக நிறுவனமான சிறுபான்மை உரிமைக் குழுவினர் (Minority Rights Group) இலங்கைத் தமிழர் பிரச்சினையை எடுத்துவிளக்கும் ஆங்கில நூலொன்றை அண்மையில் இலண்டனில் வெளியிட்டிருந்தது தெரிந்ததே. இந்த இயக்கத்தைச் சேர்ந்த வணக்கத்துக்குரிய மைக்கல்ஸ்கொட் அவர்கள் ஈழத் தமிழர் பிரச்சினையை ஐக்கிய நாடுகள் மன்றத்துக்கு எடுத்துச்செல்லுவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை இப்போது கவனித்து வருகிறார்.

சேர். ஜோன் போஸ்ரர், இயூ. சி, மைக்கல் ஸ்கொட் போன்றவர்களின் தலைமையில் இலங்கைத் தமிழர் உரிமைக்காக வாதாட இலண்டனில் இயங்கிவரும் பிரிட்டிஷ் கல்விமான்களின் குழுவும், இலண்டனில் இயங்கும் ஏனைய ஈழத்தமிழர் இயக்கங்களும் இதில் தீவிர அக்கறையெடுத்துவருகின்றன.

உலகநாடுகள் மன்றத்திலும் ஈழத்தமிழர் பிரச்சினையை எடுத்துரைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இதன் மூலம் நெருங்கி வருகின்றன ஈழத்தமிழர் பிரச்சினை ஐ. நா சபையில் முன்வைக்கப்படுவதன் மூலம், இது ஓர் உலகப்பிரச்சினையாக உருவெடுக்கும் என்ற எதிர்பார்க்கப்படுகிறது.

### பீலிக்ஸ் இலண்டன் சென்றார்!

அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகா திடீரென லண்டனுக்கு பயணமாகியுள்ளார். வைத்திய சிகிச்சைக்காகவே அவர் லண்டன் சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.




# கூட்டுச் சேரா மாநாட்டுப் பிரதிநிதிகளுக்கு ஈழப்பிரச்சினை பற்றி விளக்கம்!

கூட்டுச்சேரா நாடுகளின் மாநாட்டில் கலந்துகொள்வதற்கு இலங்கை வரும் வெளிநாட்டுத்தலைவர்கள், இங்கு வரும்போதே ஈழத் தமிழர் பிரச்சினை பற்றிப் படித்துத் தெரிந்துகொண்டு வரக்கூடியதாக தமிழ் தேசிய இனத்தின் நிலையையும் நினைப்பையும் எடுத்து விளக்கும் பிரசுரங்கள் இலண்டனிலிருந்து அவர்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டு வருகின்றன. இந்தப் பிரசுரங்கள் அவர்களது கைகளுக்கு நிச்சயமாகக் கிடைக்கக்கூடிய முறையில் இவை அனுப்பி வைக்கப் பட்டுளளன.

எதிர்வரும் ஆகஸ்ட் மாதத்தில் இலங்கையில் கூட்டுச்சேரா நாடுகளின் மாநாடு நடக்கவிருப்பது தெரிந்ததே. இந்த மாநாட்டில் கலந்துகொள்ள நூற்றுக்கணக்கான வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கை வரவிருக்கிறார்கள்.

இந்த வெளிநாட்டுத் தலைவர்களுக்கு இங்கு வைத்து ஈழத் தமிழர் பிரச்சினை பற்றி பிரசாரம் செய்வது இலங்கை அரசின் கெடுபிடி காரணமாக கஷ்டமாக இருக்கும் என்பதாலும், அவர்கள் மாநாட்டுக்கு வருவதற்கு முன்பே இலங்கையின் இனப் பிரச்சினையை தெரிந்துகொண்டு வருவதற்கு வசதியாகவும், தமிழர் பிரச்சினையை எடுத்து விளக்கும் பிரசுரங்கள் இலண்டனிலிருந்து அனுப்பப்பட்டு வருகின்றன. இலண்டனிலியங்கி

—5-ம் பக்கம் பார்க்க

# சட்டமறுப்பு இயக்கம் பற்றி மின்வேகப் பிரச்சாரம்!

### தமிழர் கூட்டணி திட்டம்!

எதிர்வரும் மே, யூன் மாதங்களில் ஆரம்பிக்கவிருக்கும் சட்ட மறுப்பு இயக்கம் பற்றி தமிழ் பேசும்மக்களின்மத்தியில் தீவிரபிரசாரம் செய்யவும் சட்டமறுப்பு இயக்கத்துக்கு தொண்டர்களைத் திரட்டவும், 'மின்வேக' பிரசாரத் திட்டம் ஒன்றை தமிழர் கூட்டணி வகுத்துள்ளது. இத்திட்டத்தின்படி, தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு ஊர்களிலும்—மூலைமுடுக்கெங்கும்— அடுத்த இரண்டு மாதங்களுக்கிடையில் கருத்தரங்குகளை தமிழர் கூட்டணி நடத்தவிருக்கிறது. ஏனைய வேலைகளை ஒத்திவைத்துவிட்டு சட்டமறுப்பு பிரசார இயக்கத்தில் தீவிரமாக ஈடுபடுமாறு கூட்டணி பா. உ.க்களிடம் தமிழர் கூட்டணியின் நடவடிக்கைக் குழு கோரவிருக்கிறது.

ஏற்கெனவே திட்டமிட்டபடி மே, யூன் மாதங்களில் சட்டமறுப்பு இயக்கத்தை ஆரம்பிப்பது என்றும், இதற்கான திட்டங்களையும், சட்டமறுப்பு ஆரம்பமாகும் திகதியையும் எதிர்வரும் மே 14, 15ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் தமிழர் கூட்டணியின் சிறப்பு மாநாட்டில் வெளியிடுவதென்றும் கடந்த வாரம் யாழ்ப்பாணத்தில் கூடிய நடவடிக்கை குழு முடிவு செய்திருக்கிறது.

சட்டமறுப்பு இயக்கத்துக்கான மின்வேகப் பிரசாரத்திட்டம் எதிர்வரும் 21-3-76 மட்டக்களப்பில, மட்டக

—5-ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தமிழ் ஈழத்தேசிய இனத்தின் விடுதலைக் குரல்



வே. சிறிபவன்,
யோகபுரம்.

கே: கிளிநொச்சியில் முக்கியமான ஒரு சுவரில் "குடியரசைப் பகிஷ்கரிக்கும் தமிழா! கூப்பன் அரிசியையும் பகிஷ்கரி!" என்று எழுதப்பட்டுள்ளது இதைப் பற்றி தங்கள் அபிப்பிராயம் என்ன?

ப: யாரோ ஒரு வயிற்றுத் தமிழனின் வயிற்றுப் போக்கு!

ஃ

க. கோபதி,
கோண்டாவில் மேற்கு.

கே: தமிழ்ச் சிங்கங்களை மோப்பம் பிடித்து அலைந்து கொண்டிருக்கிறார்களே அவர்களின் களைப்புத்தீர என்ன உணவு கொடுக்க வேண்டும்?

ப: அவர்களுக்குக்கொடுக்கக் கூடிய உணவை நாம் இன்னும் தயாரிக்கவில்லையே!

ஃ

க. புஷ்பராசா,
க. சிவனேசராசா,
கருலூர்.

கே: தமிழ்நாட்டில் மீண்டும் திமுக, ஆட்சி நடத்துமா?

ப: முதலில் தேர்தல் நடக்கவேண்டுமே!

கே: இலங்கையின் இன்றைய அரசியலைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ப: நீலச்சட்டை போட்டவர்களுக்கு இது சுக்கிர தசை!

ஃ

பி. எஸ். தேவி,
தையிட்டி.

கே: தமிழர் கூட்டணியின் கோரிக்கை எடபோது அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்படும்?

ப: கோரிக்கை சமர்ப்பித்து யாசித்துப் பெறுவதல்ல நமது இலட்சியம்!

ஃ

ஸ்ரீகாந்தன்,
இருப்பிட்டி.

கே: குமாரசூரியர் சனாதிபதியாயும் அருளம்பலம் பிரதமருமானால் தமிழனின் நிலை...?

ப: அப்போது தமிழினம் என்று ஒன்று இருந்தால் அல்லவா தமிழன் நிலையைப் பற்றி சிந்திக்கவேண்டிய தேவை ஏற்படும்?

ஃ

சோ: தவமணி,
தேவி வைத்திய நிலையம்,
முல்லைதீவு.

கே: எங்கள் பாடசாலை புத்தகங்களின் ஆசிரியர் யார்?

ப: நிச்சயமாக யாரோ கூலிக்கு மாரடிக்கும் பேர் வழிதான்!

ஃ

அ. புவனேந்திரன்,
மல்லிகைத் தீவு.

கே: ஜனநாயகம் என்றால் என்ன?

ப: அதிகாரக் கட்டிலின் இருப்பவன் தான் விரும்பிய நேரத்தில் விரும்பிய மாதிரியெல்லாம் வியாக்கியானம் கொடுக்கக்கூடிய நிலைக்கு இன்றைய ஜனநாயகம் வந்துவிட்டது!

ஃ

த. பாலகுமார்,
வரந்தன்.

கே: தமிழர் கூட்டணியை தடை செய்ய வேண்டும் என்று கம்பளை எம். பி. கூறியுள்ளதைப்பற்றி என்ன நினைக்கின்றீர்?

ப: காகம் திட்டி எருது சாவதில்லை! கவலைப்படாதீர்! வெட்ட வெட்டத் தழைக்கும் சக்திவாய்ந்தது தமிழர் கூட்டணி!

ஃ

செல்வி க. அன்பரசி,
சின்ன உப்போடை வீதி,
மட்டுநகர்.

கே: இந்தியாவில் திமுகவிற்கு ஏற்பட்டது போல் இலங்கையிலும் ஏற்படுமா?

ப: இந்தியாவில் ஆட்சியிலிருந்த திமுக அரசை மத்திய அரசு நீக்கியது; இங்கு அப்படி நீக்குவதற்கு தமிழர்களுக்கென்று பிரதேச ஆட்சி எதுவும் இல்லையே!

கே: இந்திராகாந்திக்கும், சிறிமா அம்மையாருக்கும்— உள்ள ஒற்றுமை, வேற்றுமை என்ன?

ப: இருவரும் கணவனை இழந்தவர்கள்; இது ஒற்றுமை, இந்தியை திணிக்க மாட்டேன் என்கிறார் இந்திரா; சிறிமா அம்மையாரோ சிங்களத்தை திணிக்கிறார்; இது வேற்றுமை!

ஃ

காவலூர் ராஜன்,
கரம்பொன் தெற்கு,
காவலூர்.

கே: நீங்கள் கோப்பாய் கோமகனின் நினைவாக கட்டுரைப் போட்டி நடத்தினீர்கள். ஏன் அதன் பெறுபேறுகளை வெளியிடவில்லை?

ப: மத்தியஸ்தர் குழுவிடமிருந்து இன்னும் வந்து சேரவில்லை. மிகவிரைவில் முடிவுகள் வெளியாகும்.

ஃ

மா. சுரேந்திரன்
சிவன்கோவில் வடக்கு வீதி,
வண்ணார்பண்ணை.

கே: தமிழ்த் தியாகிகளின் நினைவுச்சின்னம் உடைத்தெறியப்பட்டபின் மீண்டும் நிறுவப்படாததன் காரணம் யாதோ?

ப: உடைக்கப்பட்ட நினைவுச் சின்னம் அதே இடத்தில் உடைந்த நிலையில் அப்படியே இருப்பதே உணர்ச்சி பூர்வமான ஓர் நினைவுச் சின்னம் தானே...?

கே: அண்மையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட தமிழ் இளைஞரைப் பற்றி விபரம் ஏதும் வெளியிடாததேன்?

ப: இரண்டு நாட்கள் வைத்திய சிகிச்சைக்குப் பின்னர் மீண்டும் அவரை சிறைக்கோட்டத்துக்கு கொண்டு சென்று விட்டார்களே!

ஃ

இராசலிங்கம்,
கொழும்பு 6.

கே: குமாரசூரியர் தபாலமைச்சராகி சாதித்தபுதுமை என்ன?

ப: தபாலில் சேர்க்கும் ஒரு கடிதம் உரியவரிடம் போய்ச்சேர மூன்று நான்கு நாட்கள் — சில வேளைகளில் ஒரு கிழமை கூடச் செல்வது தான்!

● கேள்விகள் அனுப்புவோர் அஞ்சலட்டையில் பின்வரும் முகவரியை வெட்டி ஒட்டி அனுப்ப வேண்டும்.

திருவாளர் குயுக்தியார்,
194 ஏ. பண்டாரநாயக்க வீதி.
கொழும்பு-12.

# தந்தை செல்வாவுக்கு விழாவெடுப்பது தனிநபர் புகழ்பாடும் நிகழ்ச்சியல்ல!

## தமிழினத்தின் தேசிய அபிலாஷைகளை எடுத்துக்காட்டவே இந்த விழா!



தமிழர் தந்தை மூதறிஞர் செல்வநாயகம் அவர்களின் பிறந்த தினம் எதிர்வரும் 31-3-76ல் தமிழ் ஈழமெங்கும் தேசிய ரீதியில் கொண்டாடப்படவிருப்பதாக கடந்தவார சுதந்திரன் இதழில் திரவியம் அவர்கள் எழுதியகட்டுரையைபடித்து மகிழ்ந்தோம்.

மேற்படி செய்தியை மெய்ப்பிப்பது போன்று வவுனியா தமிழ் இளைஞர் பேரவை தந்தை செல்வாவின் பிறந்த தினத்தையொட்டி நடத்தும் கட்டுரைப்போட்டி பற்றிய அறிவித்தல் திரவியத்தின் கட்டுரைக்குக் கீழ் காணப்படுகிறது. வவுனியாத் தமிழ் இளைஞர் பேரவைக்கும் கவிதைப் போட்டி நடத்தும் தம்பிலுவில் இளைஞர் பேரவைக்கும் தமிழ்ப் பேசும் அனைவரினதும் பாராட்டுக்கள்.

தமிழர் கூட்டணி இயக்க ஏடுகளான "சுதந்திரன்", "குமுறல்", "இளமுழக்கம்", "காங்கிரஸ்", "தமிழகம்" மற்றும் "எழுச்சி" போன்ற ஏடுகளும் சிறப்பு மலர்களை வெளியிட முன்வரவேண்டும். "சுடர்" ஒரு சிறப்பு மலராகவே மலருமெனத் தமிழ் மக்கள் எதிர்நோக்குகின்றனர்.

### தமிழக ஏடுகள் பணி

தமிழக ஏடுகள் ஈழத் தமிழ்த் தலைவர்களைப் போதியளவு கௌரவிப்பது கிடையாது. என்று குறைப்படுவாரும் இல்லாமல் இல்லை, அவர்கள் ராஜாஜி, 'கல்கி' போன்ற மறைந்து போன பெரியார்களையும் அறிஞர் அண்ணாவையும் மறந்துவிட்டார்கள் என்றே சொல்லவேண்டும். கல்கி ஏடு தந்தை செல்வா அவர்களைப்பற்றி ஏற்கனவே பல சிறப்புக் கட்டுரைகளைத் தீட்டியிருந்தது அமரர் கல்கி மற்றும் அமரர் ராஜாஜி காலத்தில்.

தந்தை செல்வாவின் பிறந்த தினத்தையொட்டி திரவியம் தமது கட்டுரையில் குறிப்பிட்டது போல முரசொலி அடியார் தமது சொந்தப் பத்திரிகையான "நீட்டோலையை" ஒரு விசேட மலராகவே வெளியிட்டு வைத்தார் சிறப்பு அம்சங்களுடன் கடந்த ஆண்டில், அண்ணாவின் "திராவிட நாடு" ஏட்டில் அண்ணாவும், "சுயராஜ்" ஏட்டில் ராஜாஜி அவர்களும் இலங்கைத் தமிழர் அவல நிலை குறித்து அலசாத நாள் கிடையாது. அங்குள்ள இலக்கிய வார இதழ்கள் ஈழத்துத் தமிழ்ப் பெரியாரின் படங்களுக்கு அட்டைப் படங்களில் இடந்தருவதில்லையென்று குறை கூறுவதை விடுத்து தமது சொந்தத் தலைவர்களை ஈழத்து இலக்கிய ஏடுகள் கௌரவிக்கின்றனவா எனப்பார்த்துக் கொள்வது இருபக்க நல்லுறவை வளர்க்கப்பெரிதும் உதவுவதாக அமையும்.

இப்படி எழுதும் போது தமிழரசுக் கழகத் தலைவரது ... "செங்கோல்" நாம் மறந்து விடவில்லை. உலகின் கடையாந்தரம் மட்டுமுள்ள எந்தத்தமிழருக்கும்நீதி வழங்குவதில் 'செங்கோல்'' என்றும் கோணியது கிடையாது. கடந்த வருடம் அதில் வெளியிடப்பட்ட சிறப்புக் கட்டுரையே அதற்கு அத்தாட்சி.

"சுடர்" தனது பங்குனி இதழில் மூதறிஞர் செல்வாவின் படத்தை அட்டைப் படமாகத் தாங்கி வெளிவர வேண்டுவது அவசியம்.

### பொம்மைகளுக்கு இடமில்லை

தமிழ்ப் பேசும் மக்களும் தமது தேசியத் தலைவராகத் தாம் ஏற்றிருக்கும் மூதறிஞர் செல்வாவின் பிறந்த தினத்தை ஒரு தேசிய வைபவமாகவே கொண்டாடக் கடமைப்பட்டுள்ளனர்.

தமிழ்ப் பேசும் மக்களுக்கு செயற்கைத் தலைவர்களை ஆளவந்தார் உருவாக்கி மேடையேற்றி வருகிறார்கள் எப்படி கிட்லர் தான் கைப்பற்றிய நாடுகளில் தனக்குத் தலையாட்டும் பொம்மைகளாக குவிஸ்லிங் போன்றவர்களை உருவாக்கி, அந்நாடுகளில் நடமாட விட்டானோ அப்படி! தமிழ்ப் பேசும் மக்கள் ஒருபோதும் குமாரசூரியர் போன்ற குவிஸ்லிங்களை ஏற்றுக்கொள்ளப் போவதில்லை. தமிழ்ப் பேசும் மக்கள் தமிழர் கூட்டணியின் தலைமையை மட்டுமே ஏற்றுள்ளனர். அதனை வேறு பக்கங்களுக்குத் திசை திருப்ப முடியாது என்பதை ஆதாரபூர்வமாக அறுதியிட்டுச் சூழுரைக்கவே தமிழ் பேசும் இனம் தந்தை செல்வாவின் பிறந்த தினத்தை வெளிப்படையாகக் கொண்டாடுகிறதேயொழிய தனிநபர் துதிபாடுவதற்காக அல்ல.

இதனை உணர்ந்துள்ள ஒவ்வொரு தமிழ்ப் பேசும் மகனும் இந்து, இஸ்லாமியன், கிறிஸ்தவனென்ற வேறுபாடு இன்றி அந்நாளை ஒரு தேசிய வைபவமாகக் கொண்டாட வேண்டும்.

### உதயசூரியன் சின்னம் அணிவீர்

தந்தை பிறந்த நாளான மார்ச் 31ம் நாளன்று உதயசூரியன் சின்னங்கள் தரித்தவர்களாக நாடு நகர் எங்கும் நடமாடுவோம். கட்டிடங்கள், வாகனங்கள் தோறும் உதயசூரியன் கொடிகள் பறக்கட்டும். பச்சிளம் பாலரும் தமது பங்குக்கு 31-3-76 அதிகாலை சரியாக 6.00 மணிக்கு ஏககாலத்தில் பட்டாஸ்களை வெடித்து மகிழ்ச்சியால் ஆர்வாரிப்பார்களாக. வர்த்தக தாபனங்கள் வாடிக்கைகாரருக்கு அன்று சந்தனம் பரிமாறுவதுடன் நாதஸ்வர இசை ஒலிக்க மங்களகரமாக விளங்கட்டும். அன்று இடம்பெறும் விழாக்களில் மாணவ, மாணவியர் பொது மக்கள் தமிழ் இளைஞர்களுடன் இலட்சக்கணக்கில் கலந்து கொள்வார்களாக.

தந்தை செல்வாவின் 60து பிறந்த தினம் முதன் முறையாக பகிரங்கத்தில் கொண்டாடப்பட்டது மட்டுநகரில் தான். சொல்லின் செல்வர் அதற்கான ஒழுங்குகளைச் செய்துவிட்டு விழாவில் கலந்து கொள்ளும்படி தந்தை அவர்களை அழைத்தார். தந்தை அவர்களோ அப்படித் தமது பிறந்த தினம் கொண்டாடப்படுவது தமக்கு விருப்பமில்லையென்று மறுத்தார். உடனே இராசதுரை எம். பி. சொன்னார். ஐயா இது ஜனநாயகயுகம். உங்களுக்கு விருப்பம் இல்லாதிருக்கலாம் இது என் விருப்பம் மக்களின் விருப்பம் நீங்கள் கலந்து கொண்டுதான் ஆகவேண்டும் என்று. அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ். தமக்கே உரித்தான

8—ம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடைகள் எது வந்திடினும்...!

அன்பு நண்பா,

"தமிழர் கூட்டணியைத் தடை செய்"

—இப்படியொரு கூக்குரல் இலங்கை அரசியலில் இப்போது எழுந்திருக்கிறது. தேசிய அரசப் பேரவையில் துணை அமைச்சர் தேசப்பிரிய சேனநாயகாவும், கம்பளை பா.உ. ஜெயரத்தினவும், தமிழர் கூட்டணியைத் தடை செய்யவேண்டுமென்று வெறிபிடித்து அரற்றியிருக்கிறார்கள்! ஆளும் சிறீலங்கா சுதந்திரக் கட்சியின் தமிழ்ப் பகுதி எடுபிடிகளும் தமிழர் கூட்டணியை தடைசெய்ய வேண்டுமென தமது எசமானர்களிடம் "தலையணை மந்திரம்" ஓதி வருகிறார்கள்—நீண்ட காலமாக என்பதும் எமக்குத் தெரியும்!

தமிழர் கூட்டணியைத் தடை செய்ய வேண்டும் என்ற ஆளுங்கட்சிப் பா. உ.க்களின் கூக்குரல் என்னைப் பொறுத்தவரையில் மகிழ்ச்சியைத்தருகிறதே தவிர துயரத்தைத் தரவில்லை! ஒரு இயக்கம் தடைசெய்யப்படவேண்டும் என்ற கூக்குரல் கிளம்புகிறது என்றால்—அந்த இயக்கம் அபரிமிதமாக வளர்ச்சியடைந்து விட்டது என்பது தான் அர்த்தம்! அந்த இலட்சியம் மக்களின் இதயங்களிலே ஆழமாகப் பதிந்துவிட்டது என்பதுதான் அர்த்தம்!

உலகில் எந்த ஒரு இயக்கமும் தடை செய்யப்படுவதால் மேலும் மேலும் வளர்ச்சியடைந்துள்ளதே தவிர தாழ்ந்து போனதில்லை—வீழ்ந்து போனதில்லை என்பதை வரலாறு நமக்கு எடுத்துக் காட்டுகிறது!

நமது இயக்கத்தை அழித்தொழிப்பதற்கு எத்தனையோ வழி முறைகளை இதுவரை கையாண்டு அவற்றில் படுதோல்வி கண்டுவிட்ட ஆளுங்கட்சியினர்—இறுதியில் சர்வாதிகாரத்தைப் பிரயோகித்து தடைச்சட்டத்தை ஏவிவிட்டாவது இதை அழித்துவிட முடியாதா என்று இன்று அங்கலாய்க்க தொடங்கியிருக்கிறார்கள்!

நமது இயக்கத்தை அலட்சியப்படுத்தி விடுவதன் மூலம் அழித்து விடலாம் என்று முதலில் பார்த்தார்கள்—முடிவில் ஏமாந்தார்கள்!

பத்திரிகைகளையும் வானொலியையும் பிரயோகித்து நமது இயக்கத்துக்கு எதிராக பிர

## அரசியல் அரங்கு

சாரம் செய்வதன் மூலம் நம்மை அழித்து விடப் பார்த்தார்கள்—ஏமாந்தார்கள்!

பிரமர் முதல் சகல அமைச்சர்களும் தமிழ் மக்களிடம் நேரடியாகச் சென்று மணலைக் கயிறாகத்திரிப்போம் — வானத்தை வில்லாக வளைப்போம்—என்று வாக்குறுதிகள் கொடுத்துப்பார்த்தார்கள் — தமிழ் மக்கள் ஏமா[illegible]து விடவில்லை!

தமிழ் மக்களின் ஆதரவு தங்களுக்குத் தான் என்றார்கள்—காங்கேசன்துறை இடைத் தேர்தலில் தமிழ் மக்கள் அதைப் பொய்யாக்கி தந்தை செல்வாவுக்கு பெரு வெற்றியீட்டிக்கொடுத்தார்கள்!

உண்ணாவிரதங்கள் — சட்டமறுப்பு ஊர்வலங்கள்—முத்திரைச் சட்டமறுப்பு—புத்தூர் சட்டமறுப்பு—பகிஷ்கரிப்புக்கள்—ஹர்த்தால்கள்—எத்தனையோ நடத்தினோம்—கவனிக்காதவர்கள் போலப் பாசாங்கு செய்தார்கள்!

வெளிநாடுகளில் தமிழ் மக்கள் நிலையை எடுத்து விளக்கிப் பிரசாரம் மேற்கொண்டோம்—இன்று ஓடி விழிக்கிறார்கள்!

தலைவர்களைத் தவிர்த்து—தமிழ் இளைஞர்களை மட்டும் பிடித்து சிறையில் தள்ளி விடுவதன் மூலம்—நமது இயக்கத்தை நசித்து விடலாம் என்று மனப்பால் குடித்தார்கள் — முடிவில் ஏமாந்தார்கள்!

அரசின் அடக்குமுறை அதிகரிக்க அதிகரிக்க—தமிழ் இளைஞர்களின் வைராக்கியமும் அதிகரித்து வருகிறதே தவிர — அவர்கள் சோர்ந்து களைத்து—வேண்டாம் இந்த வேலை விட்டு விடுகிறோம் இந்த இயக்கத்தையென்று ஒ[illegible]ழித்துவிடவில்லை!

இந்த நிலையிலேதான் 'தடைசெய்' என்ற கூக்குரல் எழுந்திருக்கிறது. இந்தக் கூக்குரல், நமது இயக்க வளர்ச்சியின் அளவுகோல் என்றே நாம் கருதுகிறோம்!

இவ்வித சூழ்நிலையில் எதையும் தாங்கும் இதயத்துடன் சிறைச்சாலைகளில் துன்பங்களைத் தாங்கியபடி கடந்த சில ஆண்டுகளாக நலிந்திருக்கும் எம் இளைஞர்களையும் எண்ணிப் பார்த்திடுவோம்! நீதி விசாரணையோ விடுதலையோ இன்றி—தமிழ் வாழ, தமிழ் இனம் வாழ தம்மையழித்துக்கொண்டிருக்கும் அந்தத் தங்கங்களின் பெயர் விபரம் வருமாறு:—

| | பெயர் | கைதாகிய திகதி | இருக்கும் சிறை |
|---|---|---|---|
| 1 | அமரசிங்கம் பிரவுண் ரோட், நீராவியடி யாழ்ப்பாணம் | யூலை, 1972 | போகம்பரை |
| 2. | பொ. சத்தியசீலன், உரும்பிராய். | 2-2-73 | வெலிக்கடை |
| 3. | அ. ஞானசேகரம் பரந்தன் | 15-1-73 | போகம்பரை |
| 4. | பொ. திசைவீரசிங்கம் மந்துவில், கொடிகாமம் | 16-3-73 | வெலிக்கடை |
| 5 | பூ. நடேசானந்தம் கோட்டைக்கல்லாறு | யூலை 1974 | போகம்பரை |
| 6. | காசி. ஆனந்தன் அமிர்தகழி, மட்டுநகர் | 2-8-75 | வெலிக்கடை |
| 7. | ஏ. மகேந்திரன் உரும்பிராய். | 22-8-75 | வெலிக்கடை |
| 8. | வண்ணை ஆனந்தன் 471, கே. கே. எஸ். வீதி. யாழ்ப்பாணம். | 28-7-75 | வெலிக்கடை |
| 9. | சோமசுந்தரம் சேனாதிராசா மாவிட்டபுரம், தெல்லிப்பழை | 1-8-75 | வெலிக்கடை |
| 10. | சின்னையா குவேந்திர ராஜா, தாவடி வடக்கு. கொக்குவில் | 2-8-75 | வெலிக்கடை |
| 11. | ஏ. மயில்வாகனம் இராஜகுலசூரியர், இணுவில் கிழக்கு, சுன்னாகம் | 2-8-75 | வெலிக்கடை |
| 12. | ஆனந்தர் பூபதிபால வடிவேற்கரன், இணுவில் சுன்னாகம். | 20-8-75 | வெலிக்கடை |
| 13. | சி. சந்திரகுமார் 4/3, மூத்தவிநாயகர் வீதி கொட்டடி—நல்லூர் வீதி. யாழ்ப்பாணம். | 28-7-75 | வெலிக்கடை |
| 14 | சிவராமலிங்கம் சூரியகுமார் 4/3 மூத்தவிநாயகர் வீதி யாழ்ப்பாணம் | 20-7-75 | வெலிக்கடை |
| 15. | தம்பித்துரை முத்துக்குமாரசாமி திருநெல்வேலி வடக்கு யாழ்ப்பாணம் | 28-7-75 | வெலிக்கடை |
| 16. | ஆசிர்வாதம் தாசன் 67கடற்கரை வீதி யாழ்ப்பாணம். | 1-8-75 | வெலிக்கடை |
| 17. | சுந்தரம்பிள்ளை சபாரத்தினம் 97, பருத்தித்துறை வீதி யாழ்ப்பாணம், | 1-8-75 | வெலிக்கடை |
| 18. | அண்ணாமலை வரதராசா யாழ்ப்பாணம். | 2-8-75 | வெலிக்கடை |
| 19. | எஸ். அப்புத்துரை நித்தியானந்தன், 23, ஜயனார் கோவிலடி யாழ்ப்பாணம் | 28-7-75 | வெலிக்கடை |
| 20. | சிதம்பரம் புஸ்பராசா மயிலிட்டிக் கரை காங்கேசன்துறை | 1-8-75 | வெலிக்கடை |
| 21. | இராமலிங்கம் பாலேந்திரன் சென். பீற்ரஸ் லேன், நாவலி தெற்கு, மானிப்பாய் | 28-7-75 | வெலிக்கடை |
| 22. | பொன்னுத்துரை சற்குணசிங்கம், உரும்பிராய்தெற்கு | 30-7-75 | வெலிக்கடை |
| 23. | சுப்பிரமணியம் குருகுலசிங்கம் திருநெல்வேலி. | [illegible] | வெலிக்கடை |
| 24 | த. ஜீவராசா ஸ்ரேசன் ரோட் சாவகச்சேரி. | 1-8-75 | வெலிக்கடை |
| 25. | ம. பாலேந்திரன் பரந்தன். | 1-8-75 | வெலிக்கடை |
| 26 | கே. சுதர்சன் மட்டக்களப்பு | 31-7-75 | போகம்பரை |
| 27. | கே. சிவஜெயம் மட்டக்களப்பு | 8-8-75 | போகம்பரை |
| 28 | தம்பிப்பிள்ளை சந்ததியார் சுழிபுரம் கிழக்கு | 6-8-75 | வெலிக்கடை |
| 29. | அமிர்தலிங்கம் ஆனந்தகுமார் அளவெட்டி வடக்கு | 6-8 75 | யாழ்ப்பாணம் |
| 30 | வைத்திலிங்கம் ஸ்ரீதரன் தொல்புரம், சுழிபுரம் | 1-8-75 | யாழ்கிங்ஸ்ஹவுஸ் |
| 31. | வி. சதாசிவம் சதானந்தசிவம் (ஆனந்தன்) உரும்பராய் வடக்கு | 27-8-75 | யாழ்கிங்ஸ்ஹவுஸ் |
| 32. | சோமு குலசிங்கம் உரும்பிராய் கிழக்கு | 27-8-75 | யாழ் கிங்ஸ்ஹவுஸ் |
| 33. | செல்வரத்தினம் செல்வகுமார் 490, கே. கே. எஸ். ரோட், யாழ்ப்பாணம் | 28-8-75 | யாழ் கிங்ஸ்ஹவுஸ் |
| 34. | எஸ். இரத்தினபால சேச் லேன், சுண்டாளை | 31-8-75 | வெலிக்கடை |
| 35. | யோகச்சந்திரன் வல்வெட்டித்துறை | ஆக. 1975 | வெலிக்கடை |
| 36 | இராசேந்திரன் ஜெயராசா முருங்கன், மன்னார் | 31-8-75 | வெலிக்கடை |
| 37. | விஸ்வசோதி இரத்தினம் (இன்பம்) | 19-9-75 | வெலிக்கடை |
| 38 | ப. கலாபதி வல்வெட்டித்துறை | 19-9-75 | வெலிக்கடை |
| 39 | எஸ். லோகநாதன் வல்வெட்டித்துறை | 19-9-75 | வெலிக்கடை |
| 40. | ஆறுமுகம் கிருபாகரன் அரியாலை | 21-9-75 | வெலிக்கடை |
| 41. | இரஞ்சன் செங்கலடி, மட்டக்களப்பு | ஆக 1975 | வெலிக்கடை |
| 42. | வ. சிவராசா மட்டக்களப்பு | 18-9-75 | வெலிக்கடை |
| 43. | மூத்துத்தம்பி வசந்தகுமார் சென். அன்ரனிஸ் ரோட் மட்டக்களப்பு | 18-9-75 | வெலிக்கடை |
| 44 | மேரி. அல்பொன்ஸோ மட்டக்களப்பு | செப் 1975 | வெலிக்கடை |
| 45 | சேனாதிராசா ஸ்ரீஸ்கந்தராசா 83, கிறீன் ரோட் திருகோணமலை | 5-11-75 | வெலிக்கடை |
| 46. | ஜெயராஜ் கல்லடி உப்போடை மட்டக்களப்பு | ஆக 1975 | வெலிக்கடை |
| 47. | செல்லையா தனபாலசிங்கம் - (செட்டி) திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம் | யூலை1975 | வெலிக்கடை |
| 48. | சபாரத்தினம் இரத்தினகுமார், திருநெல்வேலி கிழக்கு யாழ்ப்பாணம் | யூலை. 1975 | வெலிக்கடை |
| 49. | நல்லதம்பி ஸ்ரீஸ்கந்தராசா கரணவாய் வடக்கு | 5-9-75 | வெலிக்கடை |
| 50. | புஸ்பராசா ரமணிகரன் உரும்பிராய் கிழக்கு | 8-11-75 | யாழ்ப்பாணம் |

—5- ம்பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## எண்ணம்

### தடுப்புக் காவலில் தமிழ் இளைஞர்கள்!

ஒரு குற்றவாளி சிலவேளைகளில் தண்டனையிலிருந்து தப்பினாலும் ஒரு நிரபராதி தண்டிக்கப்பட்டு விடக்கூடாது என்பதுதான் நீதியின் அடிப்படையென்று கூறுவார்கள்!

ஆனால் இந்த நாட்டிலோ அவசரகாலச்சட்டவிதிகளின் அனுசரணையுடன், 'தடுப்புக்காவல்' என்ற போர்வையின் கீழ் நிரபராதிகளும், அப்பாவிகளுமான தமிழ் இளைஞர்கள் ஆண்டுக்கணக்காக சிறைக்கொடுமைகளை அனுபவித்து வருகிறார்கள்!

நிரபராதிகளான அவர்கள் அரசியல் காரணங்களுக்காகவே வஞ்சிக்கப்பட்டு வருகிறார்கள்!

புதியகுடியரசு அரசியல் சட்டம் வந்த 1972 ம் ஆண்டிலிருந்து இந்த நிலை நீடித்து வருகிறது!

புதிய குடியரசு அரசியல் சட்டம் வந்தப்பின்னர் — தமிழினத்தின் நியாயபூர்வமான அபிலாஷைகளை மேடைகளில் எடுத்துக்கூறியதற்காக — தமிழினத்தின் உரிமைகளைக் கோரியதற்காக — 1972 ம் ஆண்டிலும் அதற்கு அடுத்த ஆண்டுகளிலும் 42 தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள்!

இந்த இளைஞர்கள் வெறும் அரசியல் காரணங்களுக்காக துன்புறுத்தப்பட்டார்களே தவிர இவர்களை நீதிமன்றத்தில் கொண்டுவரவோ இவர்களுக்கெதிராக குற்றச்சாட்டுக்களைத் தாக்கல் செய்யவோ பொலிசாரினால் முடியாது போய்விட்டது!

இதன் காரணமாக இந்த 42 இளைஞர்களில் ஐந்து பேரைத்தவிர — ஏனைய 37 இளைஞர்களும் 1974ம் ஆண்டு இறுதியிலும் 1975 தொடக்கத்திலுமாக படிப்படியாக விடுதலை செய்யப்பட்டார்கள்!

இந்த இளைஞர்களை சிறைக்குள் இரண்டு மூன்று ஆண்டுகளாக வைத்திருந்து அவர்களது இளமைக்கால வாழ்வையும் கல்வியையும் குடும்ப மகிழ்ச்சியையும் பாழடித்தார்களே தவிர — இவர்கள்மீது எவ்வித குற்றச் சாட்டையும் பொலிசாரால் சுமத்த முடியவில்லை!

அன்று விடுதலைசெய்யப்படாத ஐந்து இளைஞர்களுக்கும் எதிராக வழக்குத்தொடரப்படும் என்றார்கள்—இப்படிச் சொல்லி ஓராண்டுக்கு மேலாகிவிட்டது; அவர்கள் மீது வழக்கையும் காணோம்; அவர்கள் விடுதலை செய்யப்படுவதாயும் காணோம்!

இதற்கிடையில் ஏற்கெனவே விடுதலைசெய்யப்பட்ட தமிழ்இளைஞர்களும் —முன்பு கைதுசெய்யப்படாத தமிழ் இளைஞர்களுமாக — ஏராளமான தமிழ் இளைஞர்கள் 1975ம் ஆண்டு யூலாய், ஆகஸ்ட் மாதங்களில் மீண்டும் கைதுசெய்யப்பட்டு தடுப்புக்காவலில் வைக்கப்பட்டார்கள்.

ஏறத்தாழ 59 இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு — எட்டு இளைஞர்கள் விடுதலை செய்யப்பட்டனர். மீதி 51 பேர் சிறைச்சாலையிலேயே இன்றைக்கு வைக்கப்பட்டிருக்கிறார்கள்!

இவர்களில் ஒரு சிலர் தவிர —ஏனைய பலர் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்படவுமில்லை, இவர்களிடம் ஆரம்ப விசாரணைதானும் செய்யப்படவுமில்லை! வெறுமனே தடுப்புக்காவல் சிறைக்குள் தள்ளப்பட்டிருக்கிறார்கள்!

தமிழர் உரிமைகளை கோரியதற்காகவே இந்த இளைஞர்கள் இவ்வாறு காரணமின்றி வஞ்சிக்கப்படுகிறார்கள் என்று கருதுவதை யாரும் தவறென்றுகூற முடியாது. மனிதாபிமானமற்ற — நீதிநியாயமற்ற — இத்தகைய நடவடிக்கைகளை கண்டித்தும், இந்த இளைஞர்களை விடுதலை செய்யும்படி கோரியும் சர்வதேச இயக்கமான 'இன்டர் நாஷனல் அம்னெஸ்டி' யின் உறுப்பினர்கள் இலங்கை அரசிடம் இடித்துக் கூறிக்கொண்டேயிருக்கிறார்கள்!

எனவே அரசாங்கம், சிறைவைக்கப்பட்டிருக்கும் தமிழ் இளைஞர்களில் எவர் மீதாவது ஆதாரபூர்வமான குற்றச்சாட்டுக்கள் இருந்தால், அவர்களை நீதிமன்றத்துக்குப் பாரப்படுத்தி நீதிவிசாரணையை நடத்தட்டும்! ஏனைய இளைஞர்களை எவ்வித காலதாமதமுமின்றி உடனடியாக விடுதலை செய்யவேண்டுமென்று வற்புறுத்த விரும்புகிறோம்!

அப்பாவி இளைஞர்களின் வாழ்வைப் பாழாக்குவதற்கு உலகில் எந்த ஒரு அரசுக்கும் உரிமை கிடையாது!

சிறையிருக்கும் தமிழ் இளைஞர்களை மிகவிரைவில் விடுதலை செய்ய அரசு உத்தேசித்துள்ளதாக அண்மையில் ஒரு நாளேட்டுக்கு அளித்தபேட்டியில் பாதுகாப்பு துணை அமைச்சர் லக்ஸ்மன் ஜெயக்கொடி கூறியிருக்கிறார்!

இது உண்மையானால் — மேலும் காலதாமதமின்றி அமைச்சர் இதுசம்பந்தமாக உடன் நடவடிக்கையெடுப்பதுடன், நிரபராதிகளான இளைஞர்களை கைதுசெய்து சிறையில் தள்ளி சித்திரவதை செய்யும் பொலிசாரை எதேச்சாதிகாரத்துக்கும் எதிர்காலத்தில் முற்றுப்புள்ளி வைக்கவேண்டும் என்றும் வற்புறுத்த விரும்புகிறோம்!

# தமிழ் நாட்டின் முதுகெலும்பை இந்திரா முறித்துவிட்டாராம்!

## தமிழர் கூட்டணியின் முதுகெலும்பையும் அரசு முறிக்கவேண்டுமாம்!

### தேசிய பேரவையில் ஆளுங்கட்சியினர் பாய்ச்சல்!

"திராவிட முன்னேற்றக் கழகத்தைத் தடைசெய்தன் மூலம் தமிழ்நாட்டின் முதுகெலும்பை திருமதி இந்திராகாந்தி முறித்தெறிந்து விட்டார்! அதே போன்ற நடவடிக்கையை தமிழர் கூட்டணிக்கு எதிராக இலங்கை அரசும் எடுக்கமுன்வரவேண்டும்!"

— இவ்வாறு தேசியஅரசுப் பேரவையில் பேசிய துணை அமைச்சர் தேசப்பிரிய சேனநாயக்கா குறிப்பிட்டிருக்கிறார். துணை அமைச்சர் தனது பேச்சில் மேலும் கூறியதாவது:—

"இலங்கையின் வடபகுதியிலிருக்கும் சக்திகளுக்கும் தமிழ்நாட்டிலுள்ள திராவிட முன்னேற்றக்கழகத்துக்குமிடையேயிருந்து வரும் இரகசியத்தொடர்புகளைப்பற்றி இந்திய அரசும், இலங்கை அரசும் பல ஆண்டுகளாக விசாரணை நடத்தி வந்திருக்கின்றன. தமிழ்நாட்டு அரசைக்கலைத்ததற்கு திமுகழகம் இலங்கையில் உள்நாட்டுப்பிரச்சினைகளில் தலையிடமுயற்சித்ததும் ஒரு காரணமாகும் என்று இந்திரா காந்தி கூறியிருக்கிறார். 1972 ம் ஆண்டு அதிமுக தலைவர் திரு.எம். ஜி. இராமச்சந்திரனாலும் இப்படியொருகுற்றச்சாட்டு சுமத்தப்பட்டது.

தி.மு.கழகத்தை தடை செய்ததன் மூலம் தமிழ் நாட்டின் முதுகெலும்பை திருமதிகாந்தி முறித்தெறிந்துவிட்டார். இலங்கை அரசும் இதேபோன்ற நடவடிக்கையைதமிழர் கூட்டணிக்கு எதிராக மேற்கொள்ள வேண்டும். திமுகழகத்துக்கும் தமிழரசுக்கட்சிக்கும் இரகசியத்தொடர்பு இருந்து வருவதை நான் பல ஆண்டுகளாக கூறிவந்திருக்கிறேன். இந்திரா காந்தி எடுத்த நடவடிக்கையினால் இப்போது உண்மை அம்பலமாகிவிட்டது.

"திமுகழகத்துக்கும் தமிழரசுக்கட்சிக்குமிடையே இருக்கும் தொடர்புபற்றி விசாரிக்க அரசு ஒரு ஆணைக்குழுவை நியமிக்க வேண்டும்!"

கம்பளை பா.உ., திரு. டி. எம். ஜெயரத்தின பேசுகையில் கூறியதாவது:—

திமுகழகத்துக்காக வேலை செய்வதற்கு தமிழரசுக்கட்சி பா-உ.க்கள் இந்தியாவுக்கு சென்றிருக்கிறார்கள். இது புதினப்பத்திரிகையில் வெளிவந்திருக்கிறது. இந்தியாவில் அவர்கள் திமுக தலைவர்களுடன் பேசியிருக்கிறார்கள். அப்போது இங்கு ஒரு தனிநாடு அமைப்பதுபற்றியும் பேசப்பட்டிருக்கிறது. இலங்கையின் வடபகுதியையும் தமிழ்நாட்டையும் சேர்த்து தனிநாடு அமைக்கப்பார்க்கிறார்கள். இங்குள்ள தமிழர்களைத் தூண்டிவிடும் பிரசுரங்களை இந்தியாவிலிருந்து திமுக இங்கு அனுப்புகிறது. இலங்கையைப் பிரிப்பதற்கு தமிழரசுக்கட்சி தொடர்ந்து பிரசாரம் செய்து வருகிறது.

திமுகழகத்துடன் தொடர்பு வைத்திருப்பதை காரணமாகக் காட்டி தமிழரசுக் கட்சியை அரசு தடை செய்ய வேண்டும்!"

—(ஆதாரம் - சிலோன் டேயிலி நியூஸ் — 5-3-76)

# ஜனவேகத்துக்கு' அரசியல் பாடம்

"எங்கள் 'தனி ஆட்சியை' ஒழித்துக்கட்டியவர்கள் நீங்கள்தான்" என்று பிரிட்டிஷாரிடம் தமிழர் கூட்டணியும் சுதந்திரனும் ஏன் கேட்கவில்லையென்று குமுறுகிறது குமார் ரூபசிங்காவின் தமிழ் ஏடு!

நமக்கு உண்மையிலே ஒருவகையில் மகிழ்ச்சி!

இப்படி பிரிட்டிஷாரிடம் ஏன் கேட்கவில்லை யென்று நம்மிடம் கேள்வியெழுப்புகிறபோதே—அப்படியொரு நிலை—அதாவது 'தனி ஆட்சி' இருந்ததென்பதையும் அதைஒழித்துக்கட்டியவர்கள் பிரிட்டிஷார்தான் என்பதையும் "ஜனவேகம்" ஏடு ஒப்புக்கொள்ளுகிறது!

அந்த ஏடுகேட்கும் கேள்வியெல்லாம்—அப்படி இருந்தவொன்றை ஏன் இல்லாமல் செய்தீர்கள் என்று பிரிட்டிஷாரிடம் தமிழர் கூட்டணி ஏன் கேட்கவில்லை யென்பதுதான்!

முழு விளக்கம் அளிப்பதற்கு பத்திரிகைத் தணிக்கை விதிகள் இடம்தராததால் ஜனவேகத்துக்கு ஒன்றே ஒன்று மட்டும் கூறி வைக்கவிரும்புகிறோம்!

1833ம் ஆண்டு, தங்கள் நிர்வாக ஆட்சிக்கும் சுரண்டலுக்கும் வசதியாக இலங்கையை 'ஒன்றுக்கியவர்கள்' பிரிட்டிஷார்தான் என்றும் அவர்கள் நாட்டைவிட்டு சென்றபோது—அவர்கள் தாம் இலங்கைக்கு வந்தபோது இலங்கை எந்த நிலையிலிருந்ததோ அந்த நிலையிலேயே அதை விட்டுச்சென்றிருக்கவேண்டுமென்றும் தமிழர் கூட்டணி பல தடவைகளில் பிரிட்டிஷாரிடம் சுட்டிக்காட்டியிருக்கிறது.

1974ம் ஆண்டு ஆகஸ்ட் திங்களில் கொழும்பில் நடைபெற்ற காமன்வெல்த் பாராளுமன்ற மாநாட்டில், பிரிட்டிஷ் பிரதிநிதியையும் வைத்துக்கொண்டு, இலங்கைத் தமிழர் இன்று அனுபவிக்கும் தொல்லைகளுக்கெல்லாம் பிரிட்டிஷாரே காரணம் என்று நெற்றிக்கு நேராக நமது வி. என். நவரத்தினம் அவர்கள் குற்றம் சுமத்திப்பேசியதை இந்த ஏடு அறியாதது தான் வியப்புக்குரியது.

—எரியீட்டி

## புரட்சியில் பூத்த..

—8-ம் பக்கத் தொடர்

வருத்திக் காக பறிக்கும் செயல்களும் உண்டு. இப்படிப்பட்ட திருமணங்களில் அன்பு காதல் என்பதெல்லாம் எங்கேயோ! இவை பெரும்பாலும் வியாபார ஒப்பந்தங்கள்தான்."

இவையெல்லாம் ஒரு துறவியின், அதுவும் பிரான்சில் வாழ்ந்த ஒரு மறை வரலாற்று நாயகனோடு சம்பந்தப்படுத்தி எழுதும் அவரது யுக்தி புதுமை விரும்பிகளைப் பூரிப்பில ஆழ்த்துகின்றது.

மொத்தத்தில் பிறநாட்டு அறிவாக்கங்கள் இறக்குமதி தடை செய்யப்பட்டதன் பின்பு தரமான அறிவாக்கங்கள் கிடைப்பதில்லையே என ஏங்கும் வாசகர்களின் ஆன்மதிருப்திக்கு என்று படைக்கப்பட்ட பெருவிருந்து —"புரட்சிதான் புரட்சியில் பூத்த பூ"

நூலின் விலை: ரூபா 4.00

—நாவண்ணன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மட்டுநகர் மாநாடு!

"ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு; நம்மில்
ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வு"—
என்னும் நல்மூதுரை உணர்வோம்!
இன்றே தமிழர்நாம் ஒன்றுகச் சேர்வோம்!!
செந்தமிழ் மொழியினை வளர்ப்போம்
செகமெங்கும் தமிழோசை ஒலித்திடச் செய்வோம்!!
கத்தும் கடல் சூழ்ந்த காசினி எங்கணும்
தித்திக்கும் முத்தமிழ் நிலவிடச் செய்வோம்!
மண்ணுளோர் போற்றிடும் தமிழர் பண்பாட்டை
கண்ணெனக் காப்பது எங்கள் கடனன்றோ!
இன்னும் பணிபல இயற்றிடவேண்டும்!!
இன்றே விரைந்து தமிழ்ப் பணி செய்வோம்!
மண்ணுலகெங்கணும் வாழும் தமிழர்காள்!
பண்டைத் தமிழரின் பெருவாழ்வை மறந்தீரோ?
மீன்பாடும் வாவிசூழ் மட்டுநகரினில்
அன்னை தமிழுக்கு எடுக்கின்றார் பெருவிழா!
தமிழ்த்தாய்க்கு நற்பணி செய்கின்ற யாவரும்
தரணியில் நலமொடு வாழ்ந்திட வாழ்த்துவோம்!!
இன்னுயிர்த் தமிழுக்கு பணிபலவாற்றிட
இன்னுமேன் தாமதம்? விரைந்தின்றே வாரீர்!
உலகத் தமிழர்காள்! ஒன்றுகச் சேர்வீர்!!
உன்னதப் பணியுண்டு! உணர்ந்ததைச் செய்வோம்!!

— 'முருகு.'

## சட்டமறுப்பு...!

—1-ம் பக்கத் தொடர்

களப்பு மாவட்ட தமிழர் கூட்டணித் தலைவர் திரு. மு. மாணிக்கம் அவர்களின் இல்லத்தில் நடைபெறும் நடவடிக்கைக் குழு கூட்டத்தில் உருவாக்கப்படவிருக்கிறது.

தமிழ் ஈழத்தின் ஒவ்வொரு கிராமத்திலும் இதற்கான கருத்தரங்குகளும், தொண்டர் திரட்டும் வேலையும் அடுத்த இரண்டு மாதங்களில் தீவிரமடையவிருக்கிறது.

சட்டமறுப்பு தொண்டர்களுக்கு அஹிம்சைப் பயிற்சி அளிக்கும் பொறுப்பை பருத்தித்துறை பா. உ. திரு. க. துரைரத்தினம் ஏற்றுக்கொண்டிருக்கிறார்! தமிழர் கூட்டணித்தலைவர்கள் சிலர் தங்கள் சட்டத்தொழிலை சிறிது காலத்துக்கு ஒத்தி வைத்துவிட்டு, இயக்கப் பணியில் முழுமையாக ஈடுபடுவார்கள் என்று தெரியவருகிறது.

இதே நேரத்தில் தமிழ் இளைஞர் பேரவைக்கிளைகள் இதுவரை நிறுவப்படாத இடங்களில் எல்லாம் அவற்றை நிறுவும் முயற்சியில், எஸ். கே. மகேந்திரன், கனக—மனோகரன், பீற்றர் பொன்கலன், இரகுபதி பாலசிறீதரன், ஆகியோர் ஈடுபட்டுள்ளனர்.

## செல்வா
### பிறந்த நாள் கவிதைப்போட்டி!

மூதறிஞர் செல்வா அவர்களின் 79வது பிறந்த நாள் விழாவை யொட்டி தம்பிலுவில் தமிழ் இளைஞர்பேரவையினர் கவிதைப்போட்டி யொன்றை நடத்துகின்றனர். முதல் மூன்று சிறந்த கவிதைகளுக்குப் பரிசுகள் வழங்குகின்றனர். 'செல்வா பிறந்திலரேல்...' என்ற அடியைக்கொண்டு கவிதையாக்கப்படவேண்டும். கவிதை வெண்பாவாகவோ, எண்சீர் விருத்தமாகவோ இருக்கலாம். முடிவு திகதி 27-3-76 கவிதைகள் அனுப்பவேண்டிய முகவரி: செயலாளர் தமிழ் இளைஞர் பேரவை, தம்பிலுவில்.

தமிழ் மகளிர் பேரவையும் சுறுசுறுப்பாக இயங்கவிருக்கிறது. மகளிர் பேரவைத் தலைவி திருமதி அன்னலட்சுமி பொன்னுத்துரையும், பேரவை செயலாளர் திருமதி மங்கையர்க்கரசியும் மாதர் கருத்தரங்குகளில் கலந்துகொண்டு, பெண் தொண்டர்களை திரட்டும் பணியில் ஈடுபடுவார்கள்.

## அரசியல் மடல்

—3-ம் பக்கத் தொடர்

50. கே. கந்தசாமி நவம், 1975 யாழ்ப்பாணம்
திருநெல்வேலி வடக்கு
யாழ்ப்பாணம்

இவர்களைத் தவிர—பருத்தித்துறை பீ. வீரவாகு, மூளாய் சுழிபுரத்தை சேர்ந்த சின்னடா மதரநாயகம், நாவடிவடக்கு பொன்னுத்துரை மதிமுகராசா, கீரிமலை சி. கணபதிப்பிள்ளை, கந்தரோடை க. கணேஸ்வரம், மூளாய் கந்தையா சரவணபவன், பலாலி யோகராசா, மாவிட்டபுரம் செ. நாகராசா ஆகிய இளைஞர்கள் கைதுசெய்யப்பட்டு, சிறைச்சாலையில் சில மாதங்கள் வைக்கப்பட்டு பின்னர் விடுதலைசெய்யப்பட்டுள்ளனர்;

ஆம், நண்பா, இவர்களைப் பார்க்கும் போது—

"தடைகள் பல உண்டெனினும்
தடந்தோளுண்டு"

என்று பாடத்தோன்றுகிறதல்லவா?

உன் அன்புத் தோழன்'

கோவை-மகேசன்

# 'தமிழர் கூட்டணிக் கிளைகளை நாடெங்கும் அமைப்பீர்!'

## கொழும்புத்துறை கருத்தரங்கில் வி. என். நவம் பேச்சு!

"இன்றைய அரசியல் சூழ்நிலையில் தமிழ் பேசும் மக்களிடையே ஒற்றுமையைப் பலப்படுத்துவதற்கு தமிழ் பேசும் மக்கள் வாழும் தொகுதிகள் தோறும் பல தமிழர் கூட்டணிக்கிளைகளை அமைக்கவேண்டும். பரந்த வெளியிலே பலபேரை அழைத்து கூட்டம் நடாத்தி எமது திட்டங்களை வெளிப்படுத்துவதைவிட ஒவ்வொரு கிராமங்களின் மூலை முடுக்குகளிலும் கருத்தரங்குகள் வைத்து மக்களின் உணர்வை தட்டி எழுப்புவதன் மூலமேதான் நாம் தமிழினத்தின் விடுதலையைக்காண முடியும்;

யாழ். கொழும்புத்துறை மேற்கு திரு. கே. நாகமணி இல்லத்தில் நடைபெற்ற தமிழர் கூட்டணியினரது கருத்தரங்கில் உரைநிகழ்த்திய சாவகச்சேரி தேசியப் பேரவை உறுப்பினர் திரு. வி. என். நவரத்தினம் மேற்கண்டவாறு கூறினார்.

சுதந்திரன் ஆசிரியர் திரு: கோவை—மகேசன் பேசுகையில் கூறியதாவது இலங்கையில் தமிழர்களுக்கு இழைக்கப்பட்டுவரும் அநீதிகள் குறித்து தீவிர பிரச்சாரத்தை வெளிநாட்டில் உள்ள தமிழர்கள் மேற்கொண்டுள்ளனர். இதற்காக லண்டனில் இரு இயக்கங்கள் இயங்கிவருகின்றன. இலங்கை அரசினரால் இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு [illegible]இழைக்கப்படும் அநீதிகளை எதிர்த்து இந்த இயக்கங்கள் தீவிர பிரசாரம் செய்[illegible]வருகின்றன.

[illegible]வும் இலங்கைத் தமிழர்களு[illegible]ினைகள் குறித்து ஐக்கிய நாடுகள் சபைக்கும் தீர்மானம் ஒன்று கொண்டு வரப்படவிருக்கிறது. தீர்மானம் கொண்டு வரப்படுவதால் மட்டும் இலங்கைத்தமிழர்களுடைய பிரச்சினைகள் தீர்ந்து விடப்போவதில்லை. ஆனால் சர்வதேச அரங்கில் தமிழர்களின் நிலை உணர்த்தப்படும் என்றார்.

ஈழவேந்தன் பேசுகையில் கூறியதாவது — இன்றைய காலகட்டத்தில் நாம் மிகவும் தீர்க்கதரிசனமாகவும் சிந்தித்தும் செயலாற்ற வேண்டியவர்களாகவுள்ளோம். தமிழ் மாணவர்களின் பாடப் புத்தகங்களில் சிங்கள பெயர்களாகிய ரஞ்சித், அயித், நிமால் போன்ற மற்றும் தமிழ் மாணவர்களிடையே தரப்படுத்தல்போன்ற செயலால் தமிழ் மக்கள் மேலும் மேலும் கீழ் நிலைக்கு தள்ளப்பட்டுக்கொண்டிருக்கிறார்கள் இதனை ஒவ்வொரு தமிழ் மகனும் சிந்திக்க வேண்டும் என்றார். தரப்படுத்தலுக்கு மேலாக தமிழரின் தனித்துவம் அழிக்கப்படுவதே எம்மை எதிர்நோக்கும் பெரும் பேராபத்து என்று கூறினார்.

## முத்தமிழ் விழா கட்டுரைப்போட்டி

இலங்கை புகையிரதப் பகுதி முத்தமிழ் மன்றம் மே மாதம் நடாத்தவிருக்கும் முத்தமிழ் விழாவிற்கு பாடசாலை மாணவர்களுக்கிடையில் இலக்கிய சம்பந்தமான கட்டுரைப்போட்டி ஒன்றை நடாத்திப் பரிசில்களை வழங்கவிருக்கின்றது. பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களுக்கு "இலக்கியமும் சமுதாயமும்" பதினைந்து வயதிற்கு கீழ்ப்பட்டவர்களுக்கு "சமுதாயத்தில் பெண்களின் பங்கு" என்ற பொருள்களில் கட்டுரை எழுதும்படி கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

கட்டுரைகளை ஏப்பிரல் மாதம் 8ந் திகதிக்கு முன்னதாக கீழ்க்கண்ட முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும். கட்டுரைப்போட்டி, 180, சாலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு—5.

## கூட்டுச்சேரா...

—1-ம் பக்கத் தொடர்

வரும் தமிழர் இயக்கங்கள் இதில் ஈடுபட்டுள்ளன.

இந்தப் பிரசுரங்கள் வெளிநாட்டுத் தலைவர்களின் கைகளுக்கு நிச்சயமாகப் போய்ச் சேரக்கூடிய வகையில் இவை அனுப்பப்பட்டு வருகின்றன.

இதன்மூலம் மாநாட்டுக்கு வருகைதரும் வெளிநாட்டுத் தலைவர்கள் இலங்கையின் இனப் பிரச்சினையையும் ஈழத் தமிழர்களின் நியாயமான தேசிய அபிலாஷை[illegible] கொள்வதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளது.

## மறைவு!

இலங்கைத் தமிழரசுக் கட்சி கோண்டாவில் கிளை முன்னாள் தலைவரும் அமரர் நாகநாதன் நினைவு நிலைய ஸ்தாபகருமாகிய திரு. இ. முருகேசு பலாயன் பென்சனியர் 7.3 76 இரவு 7 மணிக்கு காலமானார் இறுதிச் சடங்குகளில் சு. கூ. தலைவர்கள் கலந்துகொண்டனர். இவரது குடும்பத்தினர்க்கு கட்சிசார்பாக ஆழ்ந்த அனுதாபத்தை தெரிவிக்கின்றனர்

## சட்டக்கல்லூரி விவாதக்குழு!

இலங்கை சட்டக் கல்லூரியின் 1976ம் ஆண்டுக்கான விவாதக்குழு தேர்வுசென்ற 27 2-76ல் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

திரு. கு இராஜகுலேந்திர (தலைவர்) திரு. கனக மனோகரன், (உபதலைவர்) திரு. மாணிக்கவாசகர், திரு. அ. ஸ்ரீகரன், திரு. இ. த. விக்னராசா, திரு. எம். ஸ்ரீதரன்

## கெட்டிக்காரனின் பொய்யும் புரட்டும்....!

கெட்டிக்காரன் புழுகு எட்டு நாளைக்கு என்பார்கள். தமிழ் நாட்டில் திமுகழகம் பிரிவினை கோருவதாகவும், அதை அடியொற்றியே இலங்கையில் தமிழர் கூட்டணியும் தனிநாடுகோருவதாகவும் இதனுல் இரண்டு இயக்கங்களுக்கும் தொடர்பு இருப்பதாகவும் தேசிய அரசுப்பேரவையில் பாதுகாப்பு துணையமைச்சர் ஒரு பெரிய புழுகை அண்மையில் அவிழ்த்துவிட்டார். அந்தப் புழுகு எட்டு நாளைக்குள் உடைந்து விட்டது!

தமிழ்நாடு பிரிவினையை திமுகழகம் கோரவில்லையென்றும், திமுகழகம் 1963ம் ஆண்டிலேயே பிரிவினைக்கோரிக்கையை கைவிட்டு விட்டதென்றும் கழகத்தின் பொதுச்செயலாளர் நாவலர் நெடுஞ்செழியன் தமது அறிக்கையில் வலியுறுத்திக் கூறியிருக்கிறார்!

இலங்கையிலுள்ள தமிழர் கூட்டணியின் கொள்கையும் செயற் திட்டமும் வேறு—தமிழ் நாட்டு திமுகவின் கொள்கையும் செயற்திட்டமும் வேறு என்பதை அரை அமைச்சர் இனிமேலாவது புரிந்து கொள்வாரா!


## மாணவமணிகளே!


உங்கள் சீருடைகளை மேலும் பளிச்சிடும் வெண்மையாகக் கூடுதல்நீலம் கலந்து மில்க்வைற் சலவைப் பவுடர் பாவியுங்கள்.

மேலுறைகளை அனுப்பி பரிசில்களைப் பெற்றுக் கொள்ளுங்கள்.

மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்,
த பெ. இல. 77, யாழ்ப்பாணம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'TRUE IMAGE' என்ற பெயரில் இலங்கைத் தமிழர்களைப் பற்றி இலண்டனில் பொய்ப் பிரச்சாரம்!



"இலண்டனில் வாழும் இலங்கை வாசிகள் சிலர் ஓர் குழுவாகச் சேர்ந்து "உண்மை வடிவம்" (TRUE IMAGE) என்ற பெயரில் ஓர் மாதாந்த செய்திக் கடிதத்தை வெளியிட்டுவருகிறார்கள். இந்தப் பிரசுரம் அரசாங்கத்தின் கொள்கையை ஒருவேளை பிரதிபலிக்கலாம். ஆனால் அது இலங்கையில்வாழும் த[illegible] உண்மையான நிலையை பிரதிபலிக்கவில்லை,

"1.12.76ந்திகதியில்வெளிவந்த'சிலோன் டெயிலிமிரர்' ஏடு இந்த அமைப்புப்பற்றியும், அதன் வெளியீடான "உண்மை வடிவம்" பற்றியும் செய்தியொன்றை வெளியிட்டுள்ளது. 2.12 75ந் திகதிய டெயிலிமிரர் ஆசிரியர் தலையங்கத்தில், உண்மையின் சார்பிலும், தங்கள் தாய்நாட்டின் சார்பிலும் தூர நாடொன்றில் வாழும் இலங்கையர்கள் முன்வந்து தங்கள் தாய் நாட்டுக்காகவும், உண்மைக்காகவும் வாதாடுவதாக மகிழ்ச்சி தெரிவிக்கப்பட்டுள்ளது.]

"உண்மை எதுவென்பதை இப்போது நாங்கள் பார்ப்போம். என்னிடம் அந்த வெளியீட்டின் பிரதியொன்று இருக்கிறது. எவ்வித குறிப்புமின்றி அதில் சொல்லப்பட்டிருப்பதை அப்படியே இங்கு வாசிகக விரும்புகிறேன்.

●

"அழகான மணற்பாங்கான கடற்கரைகளையும், இனைகபூர்வமான மக்களையும், தன்னகத்தே கொண்டு, இந்துமா கடலின் மத்தியிலே இலங்குகிறது எழில் மிகு இலங்கைத் தீவு,

"மக்கட் தொகையில் பெரும்பாலானவர்கள் இந் நாட்டின் தேசிய இனத்தினரான ஆரிய சிங்களவர்களே. தென்னிந்தியாவில் இருந்து ஒப்பந்த அடிப்படையில்—தேயிலைத் தோட்டங்களில் வேலை செய்வதற்கென—தொழிலாளர்களாக பிரித்தானிய ஆட்சியின்போது கொண்டுவரப்பட்ட சிறுபான்மையினரான தமிழர்களும், புராதனகால மூக மதியவர்க்கத்தின் எஞ்சிய நினைவுச்சின்னங்களாக ஆங்காங்கு சிதறிக்கிடக்கும் இஸ்லாமியர்களும் இங்குள்ளனர்.

"எங்கள்நாட்டிலுள்ள தமிழர்களின் உரிமைகள் பற்றி ஏற்கெனவே "பண்டாரநாயக்கா — சாஸ்திரி உடன்படிக்கையின் மூலம் தீர்வு காணப்பட்டிருக்கிறது. இதன்படி அந்தமான் தீவுகளுக்கு குடி பெயர்ந்து சென்று, அங்கேயே தம் வாழ்வை அமைத்துக்கொள்ளும் உரிமையை இந்த ஒப்பந்தம் அவர்களுக்கு [illegible]ழங்குகிறது. இவர்களைத் தவிர்த்து, குடியுரிமை பெற்ற ஏனைய தமிழர்கள், இந்நாட்டையே தமது தாயகமாகக்கொண்டு சிங்கள மொழியைக்கற்பதற்கும், பௌத்த மதத்தைத் தழுவுதற்கும், அதன் மூலம் விசுவாசமிக்க சிங்கள மக்களில் ஒருவராகவே தம்மை

மாற்றிக் கொள்வதற்கும் மகிழ்ச்சியுடன் சம்மதித்துள்ளனர்.

"இங்கிலாந்துவாழ்தமிழர்களில் பெரும்பான்மை[illegible] தமது சுவீகாரப் பூமிக்குத் திரும்பி, அங்குள்ள சிங்கள மக்களுடன் இரண்டறக் கலந்து வாழும் சமாதான நோக்குடையவர்களாகவே இருக்கின்றனர்.

பௌத்த சிங்கள இலங்கையில் நம்பிக்கையற்ற தமிழர்களுக்குச் சில அறிவுரைகள்:-

"வெறும் சொற்பிரயோகங்களோ, சுலோகங்களோ கொடிகள் காட்டுதலோ, வீணை வரட்டுக் கூச்சல்களோ எதுவாயினும், தனிப்பட்ட முறையில் எந்தவித உதவிகளையும், உங்களுக்குத் தரப்போவதில்லை. நீங்கள் யார், யாரையெல்லாம் நண்பர்கள் என்று அழைக்கிறீர்களோ, அவர்கள் ஒருபோதும் உங்களுடன் நிற்கமாட்டார்கள் என்பது உங்களுக்கு மிக நன்றாகத்தெரியும். உங்களுடன் சேர்ந்து பணத்தைப் பகிரவோ, நேரத்தைச் செலவிடவோ, அல்லது ஆபத்து நேருங்கால் அதன் அபாயத்தில் உங்களுடன் சேர்ந்துபொறுப்பேற்கவோ அவர்களால் ஒருபோதுமே முடியாது. ஆகையால் உங்களுடைய ஓய்வு நேரங்களை மிகப்பெருமை வாய்ந்த சிங்களமொழியையும், பௌத்த மதத்தினைப் பற்றியும் படிப்பதற்குச்செலவிடுங்கள். இது இறுதிவரையும் உங்களைக் காப்பாற்றுவதோடு, ஒருபோதும் உங்களைக் கைவிடவும் மாட்டாது.

சிங்களம்பேசும் கிறிஸ்தவர்களுக்கும் இஸ்லாமியர்களுக்கும் சில அறிவுரைகள்

"இப்பொழுது நீங்கள் எந்த மதத்தைத் தழுவியிருக்கிறீர்களோ, அது அன்னியர்களால் இந்நாடு ஆக்கிரமிக்கப்பட்டபோது உங்கள் முன்னோர்கள் மீது திணிக்கப்பட்ட ஒன்றாகும். இப்போது நாங்கள் சுதந்திரப் பிரசைகள். உங்களைப் பற்றி நன்கு சிந்திப்பதோடு மட்டும் நின்றுவிடாது. ஆரிய சிங்கள — பௌத்த இராச்சியத்துக்காக உங்களைத் தயார்ப்படுத்துவதின் மூலம உங்கள் முன்னோர்களுடைய ஆத்துமாக்களின் அபிலாஷைகளையும் பூர்த்தி செய்யத் தவறுதீர்கள். அழுக்கானவர்களுக்கும், புனித மற்றவர்களுக்கும் எம்மிடம் இடமில்லை.

சிங்கள இடதுசாரிகட்கும் மாவோ லெனின் ட்றொக்சிய (Trotskyites) வாதிகளுக்கும் சில அறிவுரைகள்

'எங்களுடைய குறிக்கோள்களுக்கு, தமிழர்களைப்பார்க்கிலும் மிக மோசமான பச்சைத் துரோகிகள் நீங்களே. உங்களுடைய மேற்கத்திய அரைவேக்காட்டுச் சிந்தனைகளுக்கு எமது பௌத்த சமுதாயத்தில் எவ்வித மதிப்பும் கிடையாது. எமது அரசாங்கத்தில் இருந்து உங்களுடைய சகபாடிகள் ஏற்கனவே தூக்கிஎறியப்பட்டு விட்டனர்; சிங்கள பௌத்த இலங்கையில் நாம் கொண்டுள்ள நம்பிக்கையை ஏற்கும் விதத்தில், உங்களைப் பயிற்றுவிக்கத் தக்கதாகச் சிந்தனையை மறுபரிசீலனை செய்யத் தவறும் பட்சத்தில் [illegible] ராக்களைப் பார்க்கிலும் படு [illegible] கள் பிரதம மந்திரி மத்தியிலும் மிகச் சிறந்த நண்பர்கள் உண்டு. இவர்களின் துணைகொண்டு இரண்டு பக்கங்களிலும் இருந்து உங்களை நசுக்கி, அழித்தொழிப்போம். தொடர்ந்தும் உங்களுடைய கீழ்த்தரமான நூல்களை இங்குஅனுப்பாதீர்கள். எமது எழில்மிக்க தீவில் இருந்து உங்களுக்கு ஏன் ஒரு நாடு வேண்டும் எனும் விடயத்தையிட்டு நாம் ஆராயத் தயாரில்லை.

இலங்கையின் சகல சிங்கள மக்களுக்கும்

"காலஞ்சென்ற திரு. எஸ். டபிள்யு. ஆர். டீ. பண்டாரநாயக்காவின் அரசியல் மேதா விலாசத்துக்கும், தற்போதைய பிரதமர் திருமதி பண்டாரநாயக்கா, அமைச்சர் பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்கா, ஒளிமிகுந்த எதிர்காலத்தை நோக்கி விறு நடைபோடும், மதிநுட்பம் வாய்ந்த திரு. அனுரா பண்டாரநாயக்கா ஆகியோர்களுக்கும் நாம் கட்டாயம் நன்றிக் கடப்பாடுடையவர்களாகவிருத்தல் வேண்டும். சிங்கள—பௌத்த இலங்கையொன்றைக்கட்டியெழுப்பும் பணியில் இவர்களின் கருணைமிக்க ஆட்சிதொடர்ந்து நீண்டகாலம் நடந்து வர இறைவனைப் பிரார்த்திப்போமாக.'

—[லண்டனில் உள்ள "இலங்கையைப் பற்றி உண்மை விளம்பும் இயக்கத்தால'' வினியோகிக்கப்பட்டது.]

## இதை மறுத்துரைக்க இலங்கைத் தூதர் இதுவரை முன்வராததேனோ?

இருக்கும். கொரியர்களுக்கு என்ன நடந்ததென்பதை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள். எனவே, வெளிநாட்டு உதவிகொண்டு உங்கள் பாதுகாப்பைத் தேட முயலாதீர்கள்,

தென்னிந்திய தமிழர்களுக்கு ஒரு செய்தி:-

'உங்களுடையபேராசைக் கண்களை எமது நாட்டை நோக்கித்திருப்பாதீர்கள். எங்களுடைய நாட்டுக்குப் பெரும் சுமையாகவிருக்கும் தமிழர்களை நீங்கள் எப்போது விரும்புகிறீர்களோ, அப்பொழுதே திரும்பவும் உங்கள் நாட்டுக்கு அழைத்துக்கொள்ளலாம். மிக நீண்ட காலமாக, அவர்களைக் கவனித்து, உணவளித்துக் காப்பாற்றியமைக்காக நீங்கள் கட்டாயம் எமக்கு நன்றியுடையவர்களாக இருக்கவேண்டும்.

"உங்களைச்சேர்ந்த சில மகுதிநேர அரசியல்வாதிகள், படையெடுப்பைப் பற்றியும், நாட்டைத் துண்டாடுதல் பற்றியும் பெரிதாக ஓலமிடுகிறார்கள். இவைகள் உங்களை ஏமாற்றுவதற்காகச் சொல்லப்படும் வெறும் வார்த்தை ஜாலங்களேயன்றி வேறொன்றுமில்லை. எங்களுக்கு எமது நாட்டின் வடக்கிலும், உங்

"இந்த நிறுவனம் தான் எங்கள் நாட்டு நாளேடுகளில் ஒன்றான — அனுரா பண்டாரநாயகர்வின் பத்திரிகையான டெயிலி மிரரினால் பாராட்டப்பட்டிருக்கிறது, இந்தப்பத்திரிகைக்கு "உண்மைவடிவத்தை" பிரசுரித்தவர்கள்தான் தேசபக்தர்களாக காட்சிதருகிறார்கள்.

"சேர் ஜோன் போஸ்ரர் கியூ. சி.யும்மற்றவர்களுமாகச்சேர்ந்து அமைத்த ஒரு சிறிய குழு

## தேசிய அரசுப் பேரவையில் உடுவில் தர்மலிங்கம் பா. உ. கேள்வி!

எங்கள் இலட்சியத்துக்கு ஆதரவாக 'இலண்டன் டைம்ஸ்' ஏட்டில் எழுதினார்கள். அதற்கு உடனடியாக இலண்டனிலிருக்கும் இலங்கை தூதுவர் திரு. மெண்டிஸ், மறுமொழியெழுதியிருக்கிறார். மேற்படி "உண்மைவடிவம்" என்ற பிரசுரத்துக்கு ம[illegible] மொழியெழுத இலங்கைத்தூதுவர் ஏன் மறந்தாரென்று கேட்க விரும்புகிறேன்!."

—(4.3.76 ல் தேசிய அரசப் பேரவைஒத்திவைப்புப்பிரேரணை மீது உடுவில் பா.உ திரு.வி.தர்மலிங்கம் பேசியது.)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அடையாள அணிவகுப்பு இனி நடத்தமுடியாது'

—சிவசிதம்பரம்

## சந்திரசேகரா யாழ் செல்வதற்கு பாதுகாப்பான சூழ்நிலை இல்லை!

—அரசு வழக்கறிஞர்

## அடையாள அணிவகுப்பு சம்பந்தமாக நீதிமன்றத்தில் நடந்த சட்ட மோதல்!

மூன்னாள் வடபகுதி உதவி பொலிஸ் சுப்பிரின்டன் திரு. எஸ். கே. சந்திரசேகராவை கைக்குண்டு வீசி கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பாக திரு. அமிர்தலிங்கம் ஆனந்தகுமார் 1975ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 6ந் திகதி சுன்னுகம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. எஸ். சிவரத்தினத்தால் கைதுசெய்யப்பட்டார்.

அவசரகாலச் சட்டத்தின் கீழ் அன்று தொடக்கம் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

இச்சம்பவத்தின் பொருட்டு ஓர் அடையாள அணிவகுப்பு நடத்தவேண்டுமென்று கேட்டுக்கொண்ட மனுவின் பேரில் 15-12-75ல் யாழ்ப்பாண நீதி மன்றத்தின் முன் திரு. ஆனந்தகுமார் முதன்முதலாக ஆஜராக்கப்பட்டார்.

இவரை அடையாளம் காட்டும் சாட்சியான திரு. சந்திரசேகராவின் சுகவீனம் காரணமாக அடையாள அணிவகுப்பு 14-1-76 திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது. மீண்டும், திரு. சந்திரசேகராவின் சுகவீனம் காரணமாக 14-1-76, 5-2-76, 26-2-76 பின் 23-3-76க்கு அடையாள அணிவகுப்பு ஒத்திவைக்கப்பட்டது.

இதற்கிடையில், சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் திரு பஸ்தியாம்பிள்ளை மேற்கூறிய அடையாள அணிவகுப்பு கொழும்பில் நடத்தப்பட வேண்டுமென் ஒரு மனுவை 28-2-76ல் பிரதம நீதிவான் திரு. ஏ. எஸ். விஜயதுங்காவிடம் சமர்ப்பித்தார்.

அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டுமா? என்பதையிட்டு இம்மனு விசாரணைக்கு 4-3-76ல் எடுக்கப்பட்டது.

இந்த அடையான அணிவகுப்புடன் உரும்பராய் பெற்றோல் நிலையத்தைச் சேர்ந்த நடராசா என்பவரை ஆனந்தகுமார் கத்தியால் குத்திக்கொலை செய்ய முயன்றதாகக் கூறப்படும் சம்பவம் தொடர்பான அடையாள அணிவகுப்பும் நடத்தப்படவேண்டும் என்றுப் மனுவில் கூறப்பட்டுள்ளது.

அடையாள அணிவகுப்பு நடத்தப்பட வேண்டுமா? என்பதையிட்டு இம் மனு விசாரணைக்கு 4-3-76ல் எடுக்கப்பட்டது.

சந்தேக நபர் ஆனந்தகுமார் சார்பில் எஸ். சுமந்திரன், செ. வே. விவேகானந்தன் ஏ. பி. தங்கநாதன் ஆகிய சட்டத்தரணிகளின் உதவியுடன் திரு. மு. சிவசிதம்பரம் ஆஜராகி வாதிட்டார்.

### சிவாவின் சட்டவாதம

திரு. சிவசிதம்பரம் அவர்கள் அடையாளஅணிவகுப்பு வைக்கவே கூடாது என வாதிட்டார். அவர் தனது வாதத்திற்கு சட்டப்பிரச்சினையையும் சம்பவ நிகழ்வுகளையும் ஆதாரம் காட்டி விளக்கினுர்.

ஆனந்தகுமார் கைதான நாட்தொடக்கம் அடையாள அணிவகுப்புக்காக வேண்டி மனுபோட்ட நாள் வரையுள் பல இடங்களுக்கு பலமுறை பொலிசாரால் அழைத்துச் செல்லப்பட்டார். கிங்ஸ் ஹவுஸில் பொலிசாரின் கண்காணிப்பிலும், பின் மறியல்சாலை அதிகாரிகளின் பொறுப்பிலும்விடப்பட்டார். இக்கால எல்லைக்குள் பலமுறை ஆனந்தகுமாரை பல இடங்களுக்கு பொலிசார் அழைத்துச்சென்றனர். அடையாள அணிவகுப்பை காலதாமதமாக வைக்கக்கூறப்படவில்லை. நான்கு முறை யாழ்ப்பாண நீதிமன்றத்தில் அடையாள அணிவகுப்புக்கான மனு எடுக்கப்பட்டும் திரு சந்திரசேகராவின் சுகவீனம் காரணமாக ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இக்கால எல்லைக்குள் சந்தேகநபரான ஆனந்தகுமாரை மற்றவர்கள் பார்க்கக் கூடிய சந்தர்ப்பங்கள் இருந்திருக்கின்றன. ஏறக்குறைய 7மாதங்களின் பின் அடையாள அணிவகுப்பு நடத்த கொழும்பில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. இது மிக மிக காலம் கடந்த விடயம். இக்கால எல்லைக்குள் அடையாளம் காட்ட வந்திருக்கும் சாட்சிகள் ஆனந்தகுமரை கண்டிருக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் உண்டு. ராஜஸ்தான் உயர் நீதிமன்றம் 2மாத காலதாமதித்ததினால் அடையாள அணிவகுப்பு நடத்துவதில் ஒருவித பிரயோசனமுமில்லை என்று கூறியிருந்ததையும் திரு. மு. சிவசிதம்பரம் சுட்டிக்காட்டினுர். ஆகவே, எல்லா விடயத்திலும் பாதகமான ஒரு சூழ்நிலையையே உருவாக்கும் என்றும் அதனுல், அடையாள அணிவகுப்புக்கு நீதிபதி அனுமதிக்கப்படாது என்றுவாதிட்டார்.

### அரசு தரப்பின் பதில்

அரசு தரப்பு சட்டத்தரணி திரு. ஆனந்த அமரநாயக்க காலதாமதம் ஏற்பட்டது உண்மையென்றும், அதற்கு தக்க காரணங்கள் உண்டென்றும்வாதிட்டார். திரு. துரையப்பாவின் கொலை சம்பந்தமாகவே ஆனந்தகுமார் கைதுசெய்யப்பட்டார். அதன் புலன் விசாரணையில் ஈடுபட்ட பொழுதுதான், சந்திரசேகரா மீது கைக்குண்டு வீசியவர் ஆனந்தகுமார் என ஐயப்படக்கூடிய ஆதாரங்கள் கிடைக்கப்பெற்றன. அப்படிக் கிடைத்தவுடன் அடையாள அணிவகுப்பிற்காக மனுவொன்று யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு தாக்கல் செய்யப்பட்டது என்று அரசதரப்பு சட்டத்தரணி வாதிட்டார்.

### நீதிபதியின் கேள்வி!

"யாழ்ப்பாண நீதிமன்றத்திற்கு அடையாள அணிவகுப்பிற்காக மனு செய்துவிட்டு, பின்பு இப்பொழுது கொழும்பு நீதிமன்றத்திற்கு ஏன் மனுச்செய்யவேண்டும்?" என்று நீதிபதி அரசு தரப்பு சட்டத்தரணியிடம் வினவினுர். அரசியல் சூழ்நிலைகள் சந்திரசேகரா யாழ்ப்பாணம் செல்வதற்கு பாதுகாப்பாக இருக்கவில்லை என்று விடை கூறினுர்.

"எத்தனைமுறை ஆனந்தகுமார் வெளி இடங்களுக்கு அழைத்துச்செல்லப்பட்டார்" என்ற நீதவானின் வேருெரு கேள்விக்கு அரசு தரப்பு சட்டத்தரணி "ஒரே ஒரு முறைதான். அதுவும் துரையப்பாவை சுட்டசுழல் துப்பாக்கி எடுக்கும் பொருட்டு அழைத்துச்செல்லப்பட்டார்" என்றும் கூறினுர்.

அரசு தரப்பு சட்டத்தரணியின் வாதங்களுக்குப் பதிலளித்த திரு. மு. சிவசிதம்பரம், பஸ்தியாம்பிள்ளை 6-8-75ல் ஆனந்தகுமார் சந்திரசேகராவின் மீது கைக்குண்டு எறிந்த சம்பவத்தின் மீதுதான் கைதானுர் என்று "பி" அறிக்கையில் குறிப்பிட்டிருப்பதாகச் சுட்டிக்காட்டினுர். இக்கால தாமதத்திற்கு சரியான விளக்கம் கொடுக்கப்படாதபடியாலும், தாம் முன்கூறிய காரணங்களுக்காகவும் இந்த அடையாள அணிவகுப்பை அனுமதிக்கப்படாது என்று நீதிபதியைக்கேட்டுக் கொண்டார்.

நீதிபதி தனது [illegible] இம்மாதம் 16ந் திகதி அறி[illegible]

### சுதந்திரன் புதிய சந்தா விபரம்

1976ம் ஆண்டு சனவரியிலிருந்து சுதந்திரன் புதிய சந்தா (உள்ளூர்) விபரம் வருமாறு:-

- ஓர் ஆண்டுக்கு—
  (புதன், ஞாயிறு இதழ்களுக்கு) ரூபா 50-00
- அரையாண்டுக்கு— ரூபா 25-00

சந்தாப்பணத்தை காசோலையாகவோ காசுக்கட்டளையாகவோ (நேரடியாக ரொக்கமாகவோ) செலுத்தலாம்.

பணம் அனுப்பவேண்டிய முகவரி:-

நிர்வாகி
சுதந்திரன்
194 ஏ, பண்டாரநாயக வீதி
கொழும்பு-12

## தன்கையே தனக்குதவி இதுவே நம் தாரக மந்திரம்!

எந்தவொரு சமுதாயமும் தலைநிமிர்ந்து, செல்வச் செழிப்புடன் வாழ்வதற்கு தன்னம்பிக்கை அவசியம்.

இந்தத் தன்னம்பிக்கை இல்லாததால்தான் தமிழன் தாழ்ந்து போனுன்.

சில நூற்ருண்டுகளாக அந்நியனுக்கு அடிமைப்பட்டுக்கிடந்ததால், இன்றும் காலனித்துவ மனேநிலையில் ஆட்கொள்ளப்பட்டுத் தமிழன் திணறுகிறுன்.

எடுத்ததெற்கெல்லாம் பிறர் தயவையே நாடி நிற்கிறேம். அந்நிய பொருட்கள் என்ருல் அவை எவ்வளவுதான் தரங்குறைந்திருந்தாலும் பெரிதென மதித்துப் போற்றுகிறேம். எதற்கெடுத்தாலும் எம்மை, எம்முடைய சமூகத்தைக் குறை கூறிக்கொள்கிறேம்.

இதனுல்தான் நாம் தாழ்ந்து போனேம்.

எம்மில் உள்ள தவறுகளை அலசி ஆராய்ந்து பார்ப்பதும், அந்நியனில் அழகிருந்தால் அவற்றைப் பாராட்டுவதிலும் எதுவிதத் தவறும் இல்லை. ஆனுல் ஒரேயடியாக எம்மைத் தாழ்த்திக்கொள்வதும், எம்முடைய திறனில் அவநம்பிக்கை கொள்வதும் தவறு. அந்நிய பணிகள் எதுவாயிருந்தாலும் அவை அந்நியம் என்ற ஒரே காரணத்திற்காக அவற்றைப் புகழ் பாடுவதும் தவறு.

இவைகளை இன்றையதமிழ் இளைஞர் சமுதாயம் தெளிவாக உணர்ந்து கொள்வது அவசியம். இளைஞர்களிடம் தன்னம்பிக்கை வளரவேண்டும்.

எதற்கெடுத்தாலும் பிறர் தயவை எதிர்பார்க்கும் எண்ணம் அறவே ஒழியவேண்டும். இவை எம்முடைய உரிமை இயக்கத்துக்கும், சுபீட்சமுள்ள சமுதாயத்தை பின்னர் கட்டியெழுப்புவதற்கும் அத்தியாவசியமாகும்.

நமது போராட்டத்தின்போது நாம் பிறர் தயவை எதிர்பார்த்திருக்கக் கூடாது. எம்முடைய போராட்டம் எம்மாலேயே, பிறரின் உதவி எதுவுமின்றி நடைபெறவேண்டும். இப்படியானதொரு போராட்டந்தான் என்றும் தோல்வியடையாத போராட்டமாக இருக்கும்.

"ஈராக்கில் தனிநாடு வேண்டிப்போரிட்ட கோபுஷ்டான்மக்கள் 'தன் கையே தனக்குதவி' என்பதை ஏற்கமறுத்து, முழுக்க முழுக்க ஈரானின் உதவி பெற்றுப்போராட்டம் நாடத்திஞர்கள். சென்ற ஆண்டு ஈரானுக்கும் ஈராக்கிற்கும் உடன்படிக்கை ஏற்பட்டது. கோபுஷ்டான் மக்களுக்கு எதுவித உதவியையும் அளிக்க மறுத்தது ஈரான். முடிவில் நடந்தது என்ன? கோபுஸ்டான்போராட்ட வீரர்கள் போராட்டத்தைக் கைவிட்டு விட்டு பிற நாடுகட்கு ஓடிஞர்கள்.

இதிலிருந்து நாம் படிக்கும் பாடமென்ன? நாம் என்றும் பிறர்தயவை எதிர்பார்க்கக் கூடாது. பிறர் உதவி வலியவந்தாலும் ஏற்கக்கூடாது. ஏனெனில் பிறர் உதவியை நாம் நம்பி, அதிலேயே மூழ்கினேமானுல் அப் பிறர் உதவி அரசியல்வழியில் நிறுத்தப்பட்டவுடன் எமது போராட்டமும் ஒடிந்து விடும்.

தன்னம்பிக்கையுடன், தனித்து நின்று போரிடும் ஐரிஸ் போராட்ட வீரர்களைப் பாருங்கள். அவர்களுடைய போராட்டம் எத்தனை நூற்ருண்டுகள் சென்ருலும் நசுக்கப்படமுடியாத போராட்டமாகும்.

நம்முடையபோராட்டத்தில் நாம் வெற்றிபெற்ற பின்னரும் நாம் எவர் உதவியையும், எவர் தயவையும் எதிர்பார்த்திருக்கக்கூடாது. தன்னம்பிக்கையினுலும், தியாகத்தாலுமே எம்முடைய நாட்டை சுபீட்சபூமியாக கட்டியெழுப்பவேண்டும்.

எதுவும் நம்மால் ஆகும். நாம் ஒன்றைச்செய்ய முடியாவிட்டால் பிறர் அதைச் செய்து தருவார்கள் என எதிர்பார்க்கக்கூடாது. இப்படியான தன்னம்பிக்கை எம்மிடையே வளருமானுல் நமது எண்ணங்கள், அபிலாஷைகள் நிறைவேறுவதும் நமது தமிழ் சமுதாயம் உலகின் மாதிரிச் சமுதாயமாக வருவதையோ எவரும் தடைசெய்ய முடியாது.

—கலாநிதி. ராஜ. ராஜேந்திரன்.
நியூயோர்க், அமெரிக்கா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சங்கப் பலகை

# புரட்சியில் பூத்தபூ

"புரட்சியில்பூத்தபூ"—இந்த வரலாறு பிரான்ஸியப்புரட்சியிலே பூத்திட்ட ஒரு வரலாறு. வரலாற்று நாயகன் ஒரு காலத்தில் ஆயராய் வாழ்ந்து, மதத்திலே, சமுதாயத்திலே புரட்சிமூலம் புதுமையைப் படைத்திட்ட இயூஜின்டிமாசனட் ஆண்டகையின் வாழ்க்கைச்சித்திரம்.

ஆனால் வாழ்க்கைவரலாறு மட்டும் தானா? இந்நூல் என்று படிப்பவரைச்சிந்திக்க வைக்கின்றது. பாடப் புத்தகங்கள் போன்று பண்டைப்பெருமைகளைப பறைசாற்றும் ஒரு புகழ்ச்சிஏடாக விளங்கவேண்டிய நெறியிலே நின்றுமாறுபட்டு அந்த வரலாறு இன்றைய சமூகத்திற்கு எப்படி வழிகாட்டியாக,மேற்கோளாக, எடுத்துக்காட்டாக விளங்குகின்றது என்பதை விளக்கு வதிலே இதன் ஆசிரியரான கரவையூர் செல்வம்வெற்றி கண்டிருக்கின்றார்.

அதிலும் ஆசிரியர் 19ம் நூற்றாண்டில் பிரான்சிய சமுதாயத்தின் மன்னர், பிரபுக்கள், சேரிவாழ் ஏழைகள் இவர்களிடையே இயூஜின் டிமசனட்டின் [illegible]ருவதது லெ புகுந்து ஊ[illegible]ரு[illegible] சமூகத்தின் இன்றைய நிலை[illegible] ஒப்பு நோக்கிப் பா[illegible]கின்ற தன்மை வரவேற்க[illegible] தும், வாழ்த்தவே[illegible] மாய் இ[illegible].

"மலைநாட்டில் மக்கள் பசியால் பிணமாகிறார்கள் இந்நாட்டுக்கு உழைத்த — உழைக்கும் கரங்கள் பிச்சை எடுக்கவும் முடியாமல் தவிக்கின்றன.

"ஓரினம் ஒரு குறிப்பிட்ட மொழியைப் பேசு[illegible]த்துக்காக ஒதுக்கப்பட்டு அழிக்கப் பட்டுவருகின்றது."

"ஓரினத்தில் பிறந்தகாரணத்துக்காக குற்றம் செய்யாத வாலிபர்கள் பலர் விசாரணையின்றி சிறையிலில் வைத்து வதைக்கப் படுகிறார்கள்.

"தரப்படுத்தல் என்ற அளவுகோலால் பல இளைஞர்களை, ஆற்றல் மிகுந்த வாலிபர்களை முன்னேறவிடாது. வேண்டுமென்றே தரைப்படுத்தி, அவர்களின்— இந்நாட்டின் — எதிர்கால வாழ்வை இருளவைத்துவிட்டார்களே!"

"ஆள்வோருடன் கூடினால் தான் பதவிகளை வகிக்கலாம்! பட்டங்களைப் பெறலாம், செல்வாக்குடன் வாழலாம்."

என்பனபோன்ற வரிகளைப் படிக்கும்போது நூலாசிரியர் எங்கிருந்து எங்கே நோக்குகின்றார் பிரான்சில் வாழ்ந்த ஒரு தறவியின் சரித்திரத்தை மட்டும்தானா வரைகிறார் என்பதை எந்த ஒருவனாலும் மறுகித்துக் கொள்ளாமல் இருக்கமுடியாது.

மதமும் மறை நூல்களும் மறை போதர்களும் ஆன்ம ஈடேற்றத்துக்காக மட்டும் தான் என்று பரம்பரைபரம்பரையாக இருந்துவந்த ஒரு வரட்டுக்கொள்கையைத் தடம்புரட்டி மறைஅறிஞன் இயூஜினின் மூலம் மறைவாதிகளும் சமூகத்தின் ஒரு அங்கங்களே... ஆன்மத்துறையில் மட்டுமல்ல, அரசியல் துறையிலும் அவர்களுக்கு அங்கத்துவம் உண்டு உரிமையுண்டு என்பதை வெள்ளிடை மலையாகச் சாதித்திருக்கின்றார்.

அத்தோடுவிடவில்லை... சமூகத்தின் சாக்கடைகளாய்புரையோடிப்புழுத்து விட்ட புண்களாய் இருக்கின்ற பழக்கவழக்கங்களுக்கு சாட்டையடி — இதோ ஒரு உதாரணம்.

"மாப்பிள்ளைகளை மரக்கறிவித்ததுபோல சந்தையில் விற்கிறார்கள். காலத்துக்குக்காலம் விலைகள் ஏறி இறங்கும். ஒவ்வொரு உத்தியோகத்திற்கும் ஒவ்வொரு விலை, அதிலும் இருபறிகள், ஏலம் என்று பலவகை உண்டு, கலியாணத்தின் பின்னும் மாப்பிள்ளை மாமனாரை

—[illegible]

## தந்தை செல்வா..

—2-ம் பக்கத் தொடர்

புன்னகையால் சம்மதம் கொடுத்தார். அது மட்டக்களப்பின் பழைய வரலாறு! புதிய பரணி பாடப்புறப்பட்டு நிற்கும் தமிழ் இளைஞர் படை சூழ்ந்தவர சொல்லின் செல்வர் புதிய வரலாறு படைப்பாரா? காலந்தான் பதிலுரைக்க வேண்டும்.

பாடசாலை மாணவ மாணவிகளைப் பொறுத்தவரை அவர்கள் 31—3—76 வரை காத்திருக்கப் போவதில்லை. முதல் வாரத்தில் இருந்தே ஒத்திகையை ஆரம்பிக்கவிருக்கிறார்கள். அவ்வாரத்தில் நான்கு பெரும் பாடசாலைகளுக்கு மத்தியில் யாழ் மத்திய கல்லூரியிலும், வட்டுக்கோட்டையாழ்ப்பாணக் கல்லூரியிலும் இடம்பெறும் இரு பெரும் போட்டிகள் அதற்கான வாய்ப்பை அவர்களுக்கு அளிக்கிறது. 31-2-76 பாடசாலை பஸ்களில் பயணம் செய்யும் மாணவர் தமிழர் கூட்டணியின் இயக்கப் பண்ணைக் கோஷ்டி கானமாகப் பாடிச் செல்லவுள்ளனர். அதற்கான ஒத்திகை அவர்களுக்கு மேற்படி பெரும்போட்டிகளில் தாராளமாகக்கிடைக்கும்.

—உரும்பிராய் ஆனந்தன்


2வது மாதம்!　　செல்லமகால்

மனைவி தன் கணவனுக்கும் கணவன் தன் மனைவிக்கும் தங்களைப் பற்றிய இரகசியங்களை வெளியிடாமலிருக்கலாமா இதனால் துன்பப்படுவது யார்? என்ற வாழ்க்கையின் தத்துவத்தை சித்தரிக்கும் மாது.

மயங்குகிறாள் ஒரு மாது

முத்துராமன், சுஜாதா, தேங்காய் —நடித்த

பின்னணி: வாணி ஜெயராம், பாலசுப்பிரமணியம், ஜேசுதாஸ்

ரீகல் நுவரெலியா　முத்துராமன், கே ஆர்.விஜயா நடித்த　தீர்க்கசுமங்கலி

ரீகல் கண்டி　சிவாஜி—வாணிஸ்ரீ　சிவகாமியின் செல்வன்

தம் பொருள் என்பதம் மக்கள், அவர்பொருள் தம் தம் வினையான் வரும் என்பதனை விளக்கும் படம்.

3-வது மாதம்　கெபிட்டி　ரீகல் (மட்டு நகர்)

சிவகுமார், தேங்காய் செந்தாமரை, லட்சுமி மனோரமா நடித்த

கண்மணி ராஜா

3வது வாரம்　கெப்பிட்டல்

முத்துராமன், மஞ்சுளா, ஜயந்தி, சுந்தரராஜன் நடித்த—

ஜெமினியின்

எல்லோரும்நல்லவரே

வெம்பிளி (கண்டி)

சிவாஜி - வாணிஸ்ரீ —நடித்த

வசந்தமாளிகை

(ஈஸ்மன் கலர்)

இப்பொழுது காட்சியளிக்கிறது

கிங்ஸ்லி (கொழும்பு)　பிளாசா (வெள்ளவத்தை)

சிவகுமார் கமலஹாசன் ஜெயசுதா —நடித்த

மேல்நாட்டு மருமகள் (கலர்)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை இலோன் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் கொழும்பு—12 பண்டாரநாயக்க வீதி, 194 ஏ. இலக்கத்தில் 1976—ம் வருடம் மார்ச் மாதம் 14-ந் திகதி ஞாயிற்றுக்கிழமை அச்சிட்டு பிரசுரிக்கப்பட்டுள்ளது.